# திராவிடநாடு


10—57 | வார வெளியீடு | விலை 0—2—6


# எங்கும் இந்தி! இந்தி!!

—[மா. காசிராஜன்]—

பள்ளியிலும் படிக்கின்ற பாடம் இந்தி
பலநோக்குத் தொழிற்கல்வி நிலையம் இந்தி
வெள்ளிசெப்பு நாணயங்கள் அனைத்தும் இந்தி
விரைந்தோடும் இரயில்வேயில் அறிக்கை இந்தி
துள்ளிவரும் அஞ்சலுறை அட்டை இந்தி!
தொட்டவிடம் எல்லமே இந்தி! இந்தி!
கள்ளவிழ்பூங் காதலிபால் கொஞ்சு தற்கும்
கருவிமொழி இந்தியென்றே கடிதில் சொல்வார்!!

என்னருமைத் தமிழ்நாட்டீர்! இனியுமயர்ந் திருந்தால்
எக்காள மிட்டுவரும் இந்திமொழி யாளர்
உன்னருமைத் தாய்மொழியை உருக்குலைப்ப துறுதி
உனையாளும் அரசினரோ ஊமைகளாய்ப் போனார்
இன்னலொரு கோடியெனத் 'தில்லி'செய்த போதும்
எதிர்த்துரையார்; வரிந்துகட்டார் 'ஆம்சாமி' என்பார்
என்னவோ எமக்கேனிந்தத் தொல்லை யென்று
இருந்திடவா போறீர்? எங்கே உம்வீரம்!!



# சாவடி

### "ஒற்றன்"

"பெரியய்யா! ஐதராபாத்துக்குப் போயிருந்த முதலமைச்சர் காமராசர் அவர்கள் புதியதோர் செய்தி தந்துள்ளார்......பார்த்தீர்களா?"

"என்ன சேதி மணிமுடி? கோதாவரி நீரை, தமிழ் நாட்டுக்குக்கொண்டு வரும் முயற்சிகள் நடக்கும் என்று தெரிவித்துள்ளாரே அதுவா?"

"அதுவல்ல பெரியய்யா......அம் முயற்சிதான் இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அல்ல...... அதற்கடுத்தபடி போடப்படும் திட்டத்தில் என்று அவரால் தெரிவிக்கப் பட்டிருக்கிறதே!"

"என்ன! என்ன!! இந்த இரண்டாவது திட்டத்தில்—டி. டி. கிருஷ்ணமாச்சாரி கடன் வாங்கப் போயிருக்கிறாரே, இந்தத் திட்டத்தில்—கோதாவரியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் முயற்சி நடக்காதா? என்ன மணிமுடி இது! ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி அவர்களே, தமிழ் நாட்டுக்கு உதவும் ஆவலுடன், தமது பெரிய எஞ்சினீயரைக் கூப்பிட்டு திட்டம் தீட்டும்படி சொல்லியிருப்பதாகப் படித்தேனே பத்திரிகைகளில்..."

"திட்டமெல்லாம் தீட்டலாம் பெரியய்யா! ஆனல், டில்லி தேவதை சம்மதிக்க வேண்டாமோ?"

"மணிமுடி! காமராஜ், இலேசுப்பட்ட ஆளல்ல; நீ வேண்டுமானல் பாரேன், இன்னும் ஐந்து ஆண்டுக்குள், கோதாவரி நீர் செங்கற்பட்டுக்கும் வடஆற்காடுக்கும் நிச்சயம் கிடைக்கும். விடமாட்டார், காமராஜ் காரியத்தை முடிக்காமல்......"

"அப்படி நடந்தால் ஆயிரம் வணக்கம் செலுத்துவோம், பெரியய்யா! நடப்பதுதான், சந்தேகம்...மேலும், நான் அதையல்ல புதியதோர் செய்தி என்றது..."

"பிறகென்ன! கன்னட சர்க்காருடன் கலந்து பேசி, பாலாற்றில் தண்ணீர் விடுவதுபற்றிய புதிய செய்தியோடு வந்திருக்கிறாரா?"

"ஐதராபாத்தில் கூடிய 'தட்சண அரசுகளின் கூட்டத்தில்' தான், கன்னடத்தை ஒதுக்கிவைத்திருக்கிறார்களே!!"

"ஏன் அப்படி? கன்னடம், தென்னாட்டிலிருப்பதுதானே!!"

"ஆமாம். தென்னரசுகள் எல்லாம் ஒற்றுமை கொள்ளும்படி ஏற்பட்டுவிட்டால்...? அந்த அச்சம் போலும்! கன்னடம் சேர்த்துக்கொள்ளப் படவில்லை..."

"சரி! மணிமுடி, காமராஜர் கொண்டுவந்த புதிய செய்தி என்ன?

"தட்சணப்பிரதேசம், பற்றியது பெரியய்யா!"

"தட்சணப்பிரதேசமா? நேருவே, வலியுறுத்தியும், பெரியார் அவர்கள் தந்தி கொடுத்ததால் காமராஜர் சம்மதிக்கவில்லை என்று, 'விடுதலை' கூறியதே......"

"விடுதலை, எதைத்தான் கூறாமலிருக்கிறது பெரியய்யா! ஐதராபாத் கூட்டுக் கூட்டத்துக்குப் போய்வந்த காமராஜர், நிருபர்களிடம் — எதிர்காலத்தில் அப்படியொரு அமைப்பு ஏற்பட்டால் யார் தடுக்கமுடியும்? சமீபகாலத்தில் பழசுமாறி எத்தனையெத்தனை புதிய காரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன? பழைய சமஸ்தானங்களும் ராஜாதிராஜாக்களும் இப்போது இருந்த இடம் தெரியவில்லையல்லவா?—என், பதாகக் கூறியுள்ளார்"

"...அதாவது, எதிர்காலத்தில் தட்சிண ராஜ்யம் அமையும், என்கிறார்",

"யார் தடுக்கமுடியும், என்கிறார் பெரியய்யா!"

"இதற்குப் பெரியார் என்ன சொல்வார், மணிமுடி?"

"என்னைக் கேட்டால்!"

✶

## அவர்களும் சொல்லுகிறார்கள்!

கூடாது! — என்கிறார்! ஓடு எடுத்துக்கொண்டு இன்னொரு நாட்டுக்கு ஓடுவது கூடவே கூடாதென்று கூறுகிறார்!

"உங்களுதவி கிடைக்காவிடில், நாங்கள் அழிந்துபோய்விடுவோம்" என்று கெஞ்சிக்கூத்தாடி, அமெரிக்காவிடம கையேந்திக் கொண்டு கிடக்கிறாரே டில்லி நிதிமந்திரி—இது கூடாது, கூடவேகூடாதென்கிறார்! இப்படி ஒரு நாட்டை நோக்கிப் பிச்சைப் பரத்திரம் ஏந்தி ஏன் போகவேண்டும்? எனறும கேட்கிறார்!

ஜெர்மனியும் ஜப்பானும் இப்படிப் பிச்சைப்பாத்திரம் தாங்கியா ஓடின? அவைகள் முன்னேறவில்லையா! அதுபோல நாமும் முயற்சிக்காமல், ஏன் இப்படிச் செல்லவேண்டும்!!— என்று காரசாரமாகவே, கேட்கிறார்.

கேட்பவர், சாதாரண ஆளல்ல! டில்லியில் அமைச்சராக இருந்தவர் — இபபோது நேரு பிறந்த ஐக்கியமாகாணத்துககுக் கவர்னராக இருப்பவர் — வி. வி. கிரி அவர்களதான, இவ்வண்ணம சென்னையில் பேசும போது குறிபபிட்டுள்ளார்.

அவர் கூறிய கருத்தை, சுப்ரீம் நீதிமன்றத்து உயர் நீதிபதியாயிருந்த பதஞ்சலி சாஸ்திரியாரும் ஏற்று "ஆமாம்! இபபடிப் பிச்சைப் பாத்திரம் ஏந்திக் கடனுக்காக அலைவது ஏன? எனன அவசியம வந்தது?" எனறு கேட்டுள்ளார்.

ஒருவர் கவர்னர்! இன்னொருவர் முனனாள சுபரீம் கோர்ட்டு உயர் நீதிபதி!

கிரி, மேலும சொல்லியுள்ளார். "நாட்டு மக்கள் ஒரு நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்றால்; இப்போதுபோல இன்னும் ஆறு—5 ஆண்டுத் திட்டங்கள் போட நேரும்" என்று, ஆறு, ஐந்தாண்டுத் திட்டங்கள்! ஒவ்வோர் முறையும் இப்படி ஓடு எடுததுககொண்டு ஓடினல், என்ன ஆகும்? மானம் போகும்! பாடுபட்டுக்கொண்டு வந்த சுதந்திரம் போகும்!!

# அக்கிரமம் அகல!

...ர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [6—10—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 1...

அன்றோர் நாள், வீதியெலாம் தமிழ்முழங்க, வெஞ்சிறை நோக்கி ஆயிரம் பேருக்குமேல் நுழைய, வீரர்களாம் தாளமுத்தும் நடராசனும் தமதுயிரைத் தத்தம் செய்ய, அப்போதும் "விடேன்! இந்தியினைப் புகுத்தாமல் இரேன்!!" என்று எக்காளம் எழுப்பிய, ஆச்சாரியார் அவர்கள், சென்னைத் தியாகராய நகரிலே இந்தி பற்றிப் பேசக் கூட்டம்போட்டு, குமுறலோடு தெரிவிக்கிறார் கடந்த 30-ந் தேதி, **"இந்தி என்றேனும் நம் நாட்டின் ஒரே தேசிய மொழியாக விளங்குமென யாரேனும் நினைத்தால், அது வீண் பிரமையே!"**, என்று. இதுமட்டுமல்ல, இந்தி எவ்வளவு இலாயக்கற்ற மொழியென விளக்கி, அது எப்படி ஒரு மாநிலத்துக்கு மாநிலம் கடிதம் எழுதும் மொழியாக முடியும் என்றும் கேட்கிறார். "நான்கூட மத்திய சர்க்காருக்கு ஆங்கிலத்தில்தான் எழுதுகிறேன். ஆங்கிலத்தை ஏன் அகற்றத் துடிக்கவேண்டும்?" என்றும் வினவுகிறார். ஆச்சாரியார், ஏனோதானோவல்ல! தமிழகத்து அரசியலில் அவர் வகித்திருக்கும் பங்கும் கொஞ்சமல்ல — அவரே ஒரு காலத்தில் இந்தியைப் புகுத்தப் படாத பாடு பட்டவர் — எனினும், காலமாற்றம் அவருடைய கண்களையும் திறந்திருக்கிறது; வேண்டாம் பிடிவாதம், இந்தி ஒருபோதும் இந்நாட்டு மொழியாக இயலாதென எச்சரிக்கிறார்! விளக்கம், ஆதாரங்கள், அனைத்தும் காட்டி அறிவுறுத்தியிருக்கிறார் டில்லியிலுள்ள தனது சகாக்களுக்கு!

**"உலகத்திலேயே, மோசமான ஆட்சி நடத்தி வருகிற தென் ஆபிரிகாவில்கூட, ஆங்கிலத்துக்கும் ஆபிரிக்க மொழிக்கும் இடமளிக்கப்பட்டிருக்கிறதே, ஐயா!"**

கேட்பவர் நாமல்ல, ஆச்சாரியார்! தென் ஆபிரிகா, நிறவெறியும் இனவெறியும் காட்டிடும் கூடம்—அங்குகூட ஆபிரிக்க மொழிக்கு—தாயக மொழிக்கு-ஆங்கிலத்தோடு தகுதி அளிக்கப்பட்டிருக்கிறது!! ஆனால், இங்குதான், **ஒரே மொழி** அரசு மொழியாகவேண்டும், கோர்ட்டிலும் குந்திடச் செய்யல்வேண்டும், அதிகாரத்திலும் அமர்த்திட வேண்டும், அன்றன்றாடம் உபயோகிக்கும் காசு முதல் கார்டு கவர் வரை இடம்பெறவேண்டும், என்கிற வெறி, வேகமாக வளர்ந்து வருகிறது. ஒருபக்கம் இச்சகம் பேசுகின்றனர், ஒருவர்மீதும் திணிக்கமாட்டோம் என்று. ஆனால், இன்னொரு பக்கம், வெகு வேகமாகக் காரியங்கள் செய்யப்பட்டுக்கொண்டேயுள்ளன. இத்தந்திரத்தின் ஒரு கட்டமே, மொழிக் கமிஷன் என்கிற ஒன்றை பி. ஜி. கேர் தலைமையில் நிறுவி, ஆலோசனை நடாத்தச் செய்தது. கெர், மறைந்துவிட்டார்; எனவே, அவரது நேர்மை, நீதிப்போக்கு, கமிஷனை நடத்தியவிதம் குறித்துக் குறை சொல்லல் அழகல்ல. எனினும், அக்கமிஷனின் போக்கினையும், இந்தியை 'அகில பாரத்' மொழியாக்க அது காட்டிடும் ஆர்வத்தையும் **டாக்டர் சுப்பராயனே** கண்டித்துள்ளார். இருந்தும், டில்லி, அக்கமிஷன் அறிக்கையை ஏற்றுக்கொண்டுவிட்டது. எதிர்ப்பு — கண்டனம் — ஆட்சேபம், இத்துணையுமிருந்தும், டில்லி, திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது, "இன்னும் பத்தாண்டுகளில், எப்படியும் இந்தியே அரசு மொழியாகும்," என்று. பார்லிமெண்டில் பேசிய அமைச்சர் ஒருவரும், எப்படியும் இந்தியினை அரசாங்க மொழியாக்கியே தீருவோம் என்று 'அகங்காரக் குரல்' தந்திருக்கிறார்!! அதற்கான ஏற்பாடுகளையும், டில்லி, மும்முரமாகச் செய்யத் துவங்கிவிட்டது.

இந்த அக்கிரமத்தைக் கண்டு 90-க்கு மேற்பட்ட பார்லிமெண்டு உறுப்பினர்கள் ஒரு 'மகஜர்' சமர்ப்பித்தனராம், "அவசரம் வேண்டாம் ஐயனே!", என்று, வங்கமும், தமிழகமும், கேரளமும், ஆந்திரமும், கன்னடமும் தமது

கண்டனக் குரலை உயர்த்திக் காட்டினவாம்!! எனினும் இந்திமயமாக்கிடும் வேலை துரிதமாகச் செய்யப்பட்டு வருகிறது! இந்நிலை நீடிக்குமானல்,

தாய்மொழி அழியும்.

நம் சந்ததியினர், இந்தி கற்காமல் வாழமுடியாது.

எங்கும்! எதற்கும் இந்தி!—என்கிற நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த ஆபத்தின் அளவு, இப்போதுதான் ஆச்சாரியார் போன்றோருக்கு உறைக்க ஆரம்பித்துள்ளது. காமராசருக்கும் தெரியாது என்பதல்ல! ஏனென்னில், அவரது அத்யந்த சகாவான அமைச்சர் சுப்பிரமணியமே, இரண்டாண்டுகளுக்குமுன், இந்தியைப் புகுத்துவதில் இவ்வளவு அவசரம் காட்டக்கூடாது—ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்க இந்தியால் இயலாது எனும் கருத்துப்படப் பேசியுள்ளார்!! ஆயினும், 'ஆமாம்' போடவேண்டிய நிலையிருப்பதால், அவர்களைப்பற்றி எவ்வித முடிவுக்கும் வர இயலவில்லை, நம்மால்.

இந்நிலையில், வரவிருக்கும் ஆபத்தினைத் தடுத்திட, நம் வசம் ஆற்றலும் ஒற்றுமையும் திரண்டிடவேண்டும்! தென்னகத்தின் எழுச்சியினை, தீயகுணமும், திருட்டுப்புத்தியும் கொண்ட வடவர் உணர்ந்திட வேண்டும்!! திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டுமல்ல, தென்னகமே இந்தியை எதிர்க்கிறது, என்பதனை அவர்கள் உணரும்படி செய்யவேண்டும். அதனல் தான், நமது பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன், அறிக்கை விடுத்திருக்கிறார் தாயகத்துக்கு—வரும் அக்டோபர் 13ந் தேதியை **"இந்தி எதிர்ப்பு நாளாக"** கொண்டாடும்படி!! நாவலரின் அறிவிப்புப்படி, ஆங்காங்குள்ள, கிளைக் கழகமெல்லாம், அன்று தமது கடமையைச் செவ்வனே செய்யும். எனெனில், தமிழுக்கு வரும் கேட்டினையும், இந்தி நுழைவால் எதிர்காலம் எப்படியாகும் என்கிற ஆபத்தினையும் திராவிட முன்னேற்றக் கழகம் பெரிதும் உணர்ந்திருக்கிறது. எனவே, அக்டோபர் 13ந் தேதி, ஏனையோரும் தமக்கு இந்தியின் பாலுள்ள கண்டனத்தையும் அதிருப்தியையும் எடுத்துச்சொல்லி, தீர்மானம் போட்டு டில்லிக்கு அனுப்புதல் வேண்டும்.

இப்படிக் காட்டப்படுகிற ஆர்வமும் உணர்ச்சியுமாவது, டில்லியின் ஆதிக்கக் கண்களை திறக்கிறதா இல்லையா, என்று செய்துபார்க்க இருக்கின்ற ஒரே ஒரு சனநாயக வழி, இது இப்படியும், காது கேளாவிடில், பிறகு இரு கவே யிருக்கிறது, அறப்போர்! தமிழரின் வீ மும், அவர்தம் ஆற்றலும் எத்தகையது என் தனை, வடவர் காணப்போகிற வாய்ப்பு!!

அதற்குமுன், நாம் செய்யவேண்டியதை சரிவரச் செய்வோம்—இங்கு, இந்திக்கு எவ் ளவு எதிர்ப்பு இருக்கிறதென்பதை, நேரிய வ யில் எடுத்துக்காட்டுவோம்.

## அதற்கான நாள்தான்
# அக்டோபர் 13

அழைப்பு விடுத்துள்ளார், நாவலர்! அ வரும் தத்தமது கடமையைச் செய்யவேண் மென விரும்புகிறோம்—நாடு எழட்டும், கண்ட ஊர்வலங்களும் கூட்டங்களும் நடக்கட்டும் 'டில்லி'க்குத் தீர்மானங்கள் போய்க் குவியட்

மாணவர்காள் — வாலிப நண்பர்காள் தொழிலாளத் தோழர்காள், வருகிறது இந் 'சனியன்'.

உமது அதிருப்தியையும் கண்டனத்தை காட்ட,

"வேண்டாம் இந்தி!", என்று வடவரு உணர்த்த,

மீறிப் புகுத்திடின் ஏற்கோம்—என்கி எச்சரிக்கையை உணரச்செய்ய,

நாவலர் அழைக்கிறார்!

நாடெங்கும் அக்டோபர் 13. நடைபெறட்டும்!!

நமது கண்டனத்தின் அளவையும் வலிவையும், டி உணரட்டும்!!

**வாழ்க தமிழ்! ஏற்கோம் இந்தியை! எனும், முழக்கம், எங்கும் ஒலி கட்டும்.**

**அக்கிரமம் அகலட்டும்! தமி தழைக்கட்டும்!!**

★

# இரு முனை

வாஷிங்டன் நகரைவிட்டு 30-வண்டிகள்கொண்ட ஒரு இரயில் புறப்பட்டது. பிரயாணிகள் கொண்ட இரயிலல்ல அது! எல்லாவற்றிலும் சுரைக்காய்கள் நிரப்பப்பட்டிருந்தன!! பொட்டோமாச் எனும் நதிக்கரையிலே, ஒரு மலையின் ஓரம், இரயில் நிறுத்தப்பட்டது. இரயிலின் ஒரு வண்டியில் மட்டும் இருந்த தொழிலாளர்கள் இறங்கினர். 'தொப்' 'தொப்' என்கிற ஓசை கேட்டது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம், அந்த இரயிலில் ஏற்றிவரப்பட்ட எல்லாச் சுரைக்காய்களும், அந்த ஆற்றிலே மிதந்தன. ஒரு மணி நேரத்துக்குள் எல்லாம், காலி. வண்டி, திரும்பிச் சென்றது.

*

கட்டுக்கதையல்ல, இது! ஸ்டுவர்டுசேஸ் என்பார் எழுதிய, "The Tragedy of Waste" (மிச்சத்தின் நாசம்) எனும நூலில் குறிப்பிடுகிறார், இவ்விதம்' 1920ல் நடந்தது இது. அன்றுமட்டுமல்ல, இப்போதும் கேள்விப்படுகிறோம்.

பல்லாயிரக் கணக்கான காலன் அளவுள்ள பால், ஆறுகளிலே கொட்டப்பட்டது.

கரிக்குப் பதிலாகக் கோதுமைத் தான்யங்களை எரிக்கும்படிச் செய்யப்பட்டது.

உருளைக்கிழங்கின் பெரும்பகுதி எடுக்கப்படாமலேயே, மண்ணிலேயே அழுகிப்போகும்படி விடப்பட்டது.

மோடார் செய்யும் கம்பெனிகள் பழைய மோடார்களை வாங்கி அழித்துவிடுவதற்காக, இலட்சக்கணக்கான பணம் கொடுத்து அவைகளை வாங்கித் தூள்தூளாக்கிவிடுகிறார்கள்.

என்ன காரணம்? ஏனிப்படி அமெரிக்கர் செய்யவேண்டும்? இவற்றால் யாருக்கு இலாபம்?—என்கிற கேள்விகள் எழலாம். இதற்குப் பதிலளிக்குமுன், ஒரு விஷயத்தை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். பொருள்களை உற்பத்திசெய்வது யார்? ஏன் அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள் எனும் விஷயம் தான் அது.

* * *

ஆக்ஸ் என்ற ஒருவர் பணம் சேர்த்துவைத்திருக்கிறார். அந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும், ஏதாவது ஒரு தொழில் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறார். நண்பர்களைக் கலக்கிறார்.

ஏஜண்டுகளை ஏற்படுத்துகிறார்; காலை முதல் இரவு வரை ஏஜண்டுகள் நகரம் முழுவதையும் சுற்றுகிறார்கள்; அங்கும் இங்கும் அலைந்து விசாரணை செய்கிறார்கள் ஆக்ஸின் பணத்தைக் கொண்டு என்ன செய்வது.

முடிவில் ஒரு தொழில் கண்டுபிடிக்கிறார்கள். என்ன தொழில்? குல்லாய்கள்! செய்யும் தொழில்!

"அது தான் ஒருவன் இப்பொழுது செய்யவேண்டிய வியாபாரம். குல்லாய்கள் ஏராளமாக விற்கின்றன; அதனால் எத்தனையோ பேர் பணஞ் சேர்க்கிறார்கள். இதில் யோசிக்கவேண்டியது ஒன்றுமில்லை" என்று கருதி ஆக்ஸ் ஒரு குல்லாய்ஆலை அமைக்கிறார்.

அதே சமயத்தில் அதே யோசனை மிஸ்டர் பாக்ஸ் என்பவர்க்கும், காக்ஸ் என்பவர்க்கும், நாக்ஸ் என்பவருக்கும் தோன்றுகிறது. அவர்கள் எல்லோரும் ஏக காலத்தில் குல்லாய் ஆலைகளை கட்டத் தொடங்குகின்றனர்.

ஆறுமாதத்திற்குள் நாட்டில் புதுக்குல்லாஆலைகள்பல எழுந்துவிடுகின்றன. இதனால் கூரைவரையிலும், கடைகளில்குல்லாய்ப்பெட்டிகள் நிறைகின்றன. கிடங்குகளில் இடமில்லாமல் திணறிக்கொண்டிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் விளம்பரங்கள், படங்கள், குறிகள் தான். குல்லா, குல்லா, குல்லா. எவ்வளவு தேவையோ, அவ்வளவைவிட மிகக்கூடுதலாக இரண்டு பங்கோ, மூன்றுபங்கோ கூடுதலாகக் குல்லாய்கள் செய்யப்பட்டுவிட்டன. பின்னும், ஆலைகள் விடாது விசையோடு வேலை செய்து வருகின்றன,

இங்கே, ஆக்ஸோ, பாக்ஸோ, நாக்ஸோ, காக்சோ யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்கிறது, என்னவென்றால் மக்கள் குல்லாய் வாங்குவதை நிறுத்திவிடுகிறார்கள். நாக்ஸ் விலையை இருபது சதவீதம் குறைக்கிறார்; காக்ஸ் 40 சதவீதம் குறைக்கிறார்; பாக்ஸ் அவற்றை எப்படியாவது தள்ளிவிட்டாற் போதுமென்று நஷ்டத்தில் விற்கிறார். வியாபாரம் நாளுக்குநாள் மந்தமாகிக்கொண்டு போகிறது.

எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் தோன்றுகின்றன. எப்படி?

**"உங்களுக்கு ஒரே தலை இருக்கலாம்; அதனால் நீங்கள் ஒரு குல்லாய்தான் அணியவேண்டுமென்பது ஆகாது; ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் மூன்று குல்லாய்கள் இருக்கவேண்டும். மி. ஆக்ஸின் குல்லாயையே வாங்குங்கள்!"**

பாக்ஸ் மூன்று ஆண்டுகளுக் குள், கெடுக்களில் பணம் செலுத் திஞற் போதுமென்ற முறையில் விற்க முன்வருகிருர்.

நாக்ஸ் ஒரு குறைந்த விலை விளம்பரத்தை அறிவிக்கிருர்.

**"ஒரே ஒரு நாள்தான்! இத்தருணம் தவறினுல் மறுதருணம் வாய்ப்பதரிது!" "குறைந்த விலை"**

ஆனுல் இந்த விளம்பரங்கள் பலிக்கவில்லை. ஆக்ஸ் அவருடைய வேலையாட்களின்கூலியை வாரத்துக்கொரு டாலர் குறைக் கிருர். காக்ஸ் இரண்டு டாலர் குறைக்கிருர். பின்னும் வியாபாரம் மந்தமாகிக்கொண்டே வருகின்றது.

உடனே திடீரென்று மிஸ்டர் ஆக்ஸ் அவருடைய ஆலையை மூடிவிடுகிறார். இரண் டாயிரம் வேலை ஆட்களுக்கு வேலை யில்லாமல், மனம்போனபடி திரிய இடனாகின்றது. அடுத்த நாள் மி. நாக்ஸ் என்பவருடைய ஆலை மூடப்படுகிறது. ஒரு வாரத்துக் குள்அனேகமாக எல்லாக்குல்லாய் ஆலைகளும் வேலையில்லாமல் வீணாகக் கிடக்கின்றன. ஆயிரக் கணக்கான வேலையாட்கள் வேலை யில்லாமல் திண்டாடுகிருர்கள். இயந்திரங்களோ துருப்பிடிக்கின் றன. கட்டடங்களோ ஒன்றுக்குப் பாதியாக விலைக்குப் போகின்றன

ஒன்றிரண்டு ஆண்டுகள் செல் கின்றன. நாக்ஸ், பாக்ஸ், காக்ஸ், ஆக்ஸ் முதலியோர்களிடமிருந்து முன்பு வாங்கப்பட்ட குல்லாக்க ளெல்லாம், பழையனவாய்ப் போய் விடுகின்றன. திரும்பவும் ஜனங்கள் குல்லாய்கள் வாங்கத் தொடங்கு கின்ருர்கள். குல்லாக் கடைகள் காலியாகின்றன. உச்சிவரை கடை யில் அடுக்கியிருந்த, தூசு படிந்த குல்லாக்கூட விற்பனையாகிவிட் டது. கடைகளில் போதிய குல் லாக்களில்லை குல்லாய் விலை ஏறு கின்றது.

இப்பொழுது, ஆக்ஸ் அல்ல, ஆனுல் வேருெருவர் மிஸ் டர், டேடில் என்பவர் ஒரு இலாப மான துறையைப் பற்றி யோசித் துக்கொண்டிருக்கிருர். குல்லாய் கிருக்கியைப பார்த்து குல்லாய் ஆலை கட்டக்கருதுகிருர். இதே கருத்து 'மிஸ்டர்' பூடில், 'மிஸ்டர்' கூடில், மிஸ்டர் நூடில் என்ற வேறு சில வியாபாரிகளுக்கும் தோன்றுகின்றது. பழைய கதை பின்னும் ஆரம்பமாகிறது.

இந்தக் குல்லாய்க்கதையே மிதி யடி, சர்க்கரை, இரும்பு, கரி, மண் ணெண்ணெய் முதலிய எல்லாப் பொருள்களிலும் நிகழ்கின்றன. ஆலைகள் அனேகம் நீர்க்குமிழி போல் தோன்றி அழிகின்றன. மக் கட்கு மதி கலங்கிவிட்டதோ என்று தோன்றுமாருயிருக்கிறது.

* * *

**தானியத்தின் விலை உயரவேண்டும்! அப்போதுதான் அதிக இலாபம் கிடைக் கும்!!**—அதனுல் ஆக்ஸ், சில வண் டிக்கணக்கான தானியத்தை எரித்துவிடுகிருர். பால் விலை குறையாமலிருப்பதற்காகப் பால் வீணுக்கப்படுகிறது. சுரைக்காய் 'மார்க்கெட்' கெட்டுவிடாமலிருப் பதற்காக ஆற்றிலே வீசியெறியப் படுகிறது.

இலட்சக்கணக்கான இயந்திரங் கள் படைத்ததென்று பெருமிதம் பாராட்டிக்கொள்ளும் ஒரு நாட் டிலே, இப்படி மக்களுக்குப் பயன் பட வேண்டிய பொருள்கள், வீணுக்கப்படுகின்றன. ஏன்? இலாபம் குறையக்கூடாதென் பதே முதலாளிகளின் நோக்கமா யுள்ளது! ஆனுல் இதே சமயத் திலே, "பிராட்வேயில் கொள்ளை," "பிளாட்பாரத்திலே வசிப்போரின் அல்லல்," என்பதுபோன்ற செய் திகளும் அமெரிக்காவிலிருந்து வராமல் இல்லை!!

"ஒவ்வொரு அமெரிக்கருக்கும் 230 இயந்திர வேலைக்காரர்களிருக் கிருர்கள்", என்று பெருமையாகக் கூறிக்கொள்ளப்படுகிறது. நாட் டில் அவ்வளவு ஆலைகள் உள் ளன. அப்படியானுல், அங்கேயும் வறுமையிருப்பதாக ஏன் பேசப் படுகிறது? இலட்சக்கணக்கான மக்கள் இன்றியமையாத பொருள் கள்கூட இல்லாது ஏன் தவிக் கின்றனா?

வேறு எதுவுமல்ல காரணம்! இந்த ஆலைகள் யாவும்—இயந் திரங்கள் எல்லாம்—அமெரிக்க மக்கள் அனைவருக்கும் 'உரிய தல்ல; ஆனுல் அவர்களுள் ஒரு சில முதலாளிக்கே உரியதாகும். மோட்டார் மன்னரான போர்டு பிரபுவுக்கு அமெரிக்காவில் மட் டுமே 60-க்கு மேற்பட்ட மோடார் ஆலைகள் இருந்தன 1920-ல் எனக் கூறப்படுகிறது. தனக்கே சொந்தமான இரயில் பாதைகள், நீராவிக் கப்பல், உலோகச் சுரங் கங்கள், காடுகள், மலைகள், ஆறு கள் எல்லாம் உண்டு அவருக்கு. அ நுடைய ஆலைகள் அனைத் திலுமுள்ள தொழிலாளர்களை யெல்லாம் திரட்டி ஒரு இடத்தில் வைப்பதானுல் அது ஒரு பெரிய நகரமாகும். ஏனெனில் கிட்டத் தட்ட 30 இலட்சம் மக்கள் இருக் கக்கூடும்.

**ஒரு தனி மனிதன், இயந்திரங்களுக் குச் சொந்தக்காரராயிருப்பதால், இலட் சக்கணக்கான மக்கள் அவருக்குக் கீழ் பாடுபட வேண்டியிருக்கிறது.**

இதுதான் முதலாளித்துவ அமைப்பு! இதே சமயத்தில், சமதர்ம முறைப்படி இருக்கும் அமைப்பின் அடிப்பீடம் என்ன எனபதைக் கவனிப்போம்!! அதற்கு நமக்கு உதாரணமாக யிருப்பது, ரஷ்யாதான்.

இங்கே,

## மாவட்டத் தொடர்பு மாற்றம்

சென்னை மாவட்ட தி. மு. கழ கத்தின் நிர்வாகப் பொறுப்பில் இதுவரை இயங்கிவந்த கீழ்க்கண்ட ஆறு கிளைக் கழகங்கள், சென்னை —செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகங்களின் நிர்வாகிகள் உடன் பாட்டோடும், சம்பந்தப் பட்ட கிளைக் கழகங்களுக்கு முன்னரே அறிவித்துள்ளபடியும், இன்று 17—9—57-ம் நாள் முதல் செங்கற் பட்டு மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்புக்கு மாற்றப் படுகின்றன. இன்று முதற்கொண்டு கீழ்க்கண்ட ஆறு கிளைகளும் செங் கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத் திற்கு உட்பட்ட கிளைகளாகப் பணியாற்றும்.

மாற்றப்படும் கிளைகள் :—

1. திருவொற்றியூர் தி. மு. க. கிளை
2. புழல் ,,
3. மாதவரம் ,,
4. கொடுங்கையூர் ,,
5. செங்குன்றம் ,,
6. ஆலந்தூர் ,,

'அறிவகம்' சென்னை 17—9—57

தலைமைக் கழகம், (தி. மு. க.)

இயந்திரங்கள் மிஸ்டர் ஆக்ஸுக்கும், மிஸ்டர் பாக்ஸுக்கும் சேர்ந்தவையல்ல; எல்லாம் தொழிலாளிகளுக்கே சொந்தமானது. இது, மேலே குறிப்பிட்ட நாசமாக்கும் விஷயங்களைத் தலைகீழாக மாற்றிவிடுகின்றது. அதாவது தொழிலாளிகள் மோட்டார்களை உடைக்க விரும்புவதில்லை; அவர்கள் பாலை ஆற்றிற் கொட்டவோ, கோதுமையைக் கரிக்கு நிகராகக் கொளுத்தவோ, முட்டை முட்டையாக சுரைக்காய்களை அழிக்கவோ ஆசைப்படுவதில்லை. மோட்டார், பால், கோதுமை காய்கறி என்றால் எல்லாம் உழைப்பு என்று தொழிலாளிகள் அறிவார்கள். ஒரு மோட்டார் உண்டாக்க வேண்டுமானால் யாராவது ஒருத்தன் உழைத்துத்தான் ஆகவேண்டுமென்பதை அவர்கள் அறிவர். பின், ஏன், உழைப்பு நேரமும் வீணாக்கப்படல் வேண்டும்.

இங்கே, ஒரு திட்டமிட்டு வேலை நடக்கிறது.

முதலாளித்துவ அமைப்பில் அவர்கள் எவ்விதத் திட்டமும் இல்லாமல் வேலை செய்கின்றார்கள்.

பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கப்படுகிறது.

அவர்கள் உற்பத்தியைச் சுருக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தை பெருக்குகின்றார்கள்.

இன்றியமையாதன உண்டாக்கப்படுகிறது.

அங்கே நூற்றுக்கணக்கான ஆலைகளின் பொருளும், உழைப்பும் சற்றுமே பயனில்லாத பண்டங்களை உற்பத்தி செய்வதில் விரயமாக்கப்படுகின்றன.

*

முதலாளித்துவ அமைப்பில், விளம்பரங்கட்காக எவ்வளவு பணம் வீணாக்கப்படுகின்றது!

ஒரு நாள் பொழுதிலே, அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகளிலே தோன்றும் ஒரு நாளைய விளம்பரங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் படிக்கவேண்டுமானால், ஐந்நூறு ஆண்டுகளாகலாமாம். தெருவழிகளினோரமாக மனங்கவருமிடங்களிலெல்லாம் பெரிய சித்திர விளம்பரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு அழகிய காட்டின் எல்லையிலே ஸ்மித்தின் பற்பசையை வாங்கும்படி தூண்டப்படுகின்றது; பெயர்பெற்ற ஒரு மலையின் உச்சியிலே, கூட விளம்பர விளக்கு!! மாலையிலே நகரங்கள் முழுவதுமே எண்ணிறந்த மின்சார விளக்குகளாலான குறிகளாலும், விளம்பரங்கள் வாக்கியங்களாலும் பொலிகின்றன. ஒரு அமெரிக்கா நகரத்திலே கிஸிவ்லாந்து கம்பெனியின் கட்டடக் கூரையிலே "இந்தக்குறி ஒரு பெரு நகரத்தைவிடக் கூடுதலான மின்சாரம் எரிக்கின்றது" என்ற விளம்பரம் தொங்குகின்றது.

மக்கட்கு அவசியமில்லாத பொருள்களை வாங்கிச் செய்வதற்காக, எத்தனையோ இலட்சடன் விறகும், மின்சாரசக்தியும், பொருள்களும்: எத்தனையோ இலட்ச வேலையாட்களது காலமும் பாழ் செய்யப்படுகின்றன. மனித உழைப்பு வீணாகின்றது; வீண்படுகின்றது; இதனால் எந்தப் பயனும் உண்டாவதில்லை.

இவையெல்லாம் எதனால் நிகழ்வனவென்றால், இயந்திர அடிமைகளெல்லாம் தொழிலாளிகளுடைய உடைமையாக இல்லாமல், ஆக்ஸினுடையவும், பாக்ஸினுடையவும் உடைமையாக இருப்பதால்தான். "பணம் சேர்ந்தால் சரி. எந்தப் பொருள் வேண்டுமானாலும் செய்யலாம்" என்பதே அவர்கள் கொள்கை. அது சமூகத்துக்குப் பயன்தருவதா பயனற்றதா? என்பதைப்பற்றி அவர்கட்கு அக்கரையே இல்லை.

இல்லாவிட்டால், ஏன் மிஸ்டர் ஆக்ஸ் ஒரு குல்லாக் கடையைத் தொடங்கவேண்டும்? "குல்லாக்கள் இல்லையே. உண்டாக்கவேண்டுமே" என்ற கவலையாலா? இல்லவே இல்லை; பணம் உண்டாக்குவதற்காகத்தான். அவருக்குள்ள எல்லாக்கடையும் தன் லாபத்துக்கும் தன் ஆதாயத்துக்குமே

ஆக்ஸுக்கும், மிஸ்டர் பாக்ஸுக்கும் ஒரு தொழிலாளி, என்றால் அவன் ஒரு தொழில் செய்யும் மனிதப் பிறவியல்ல, ஆனால் இலாபஞ் சேர்க்க உதவும் ஒரு கருவியே ஆகும் என்றுதான் கருதுகிறார்கள். இரும்பாலும் எஃகாலுஞ் செய்த ஒரு இயந்திரத்தைப் பற்றி, அவர்கள் மிகுந்த கவலை எடுத்துக்கொள்வார்கள், அதற்கு அளவுக்குமேல் வேலை கொடுக்கமாட்டார்கள்; ஏனெனில் அது அதிக விலையுடையதல்லவா; அது பழுதாய் விட்டால் எவ்வளவு நஷ்டம்? ஆனால் ஆலையில் வேலை செய்யும் ஒரு மனித இயந்திரத்தை என்ன விலை கொடுத்து வாங்குகிறார்கள்? ஒன்றுமே இல்லை. ஆகையால் அந்த மனித இயந்திரத்தால் முடியுமட்டும் நல்ல வேலை வாங்கிவிடுகிறார்கள். அது தேய்ந்து போனால் அதாவது அதன் பலங் குறைந்துவிட்டால் — "சரி அடித்துத் தள்ளு அதை" என்று சொல்லிவிடுகிறார்கள். ஏனெனில் அதுபோல் வேறு எத்தனையோ கிடைக்கும்.

*

முதலாளித்துவ முறையிலே, இயந்திரம், தொழிலாளிக்கு உதவும் ஒரு கையாளல்ல, ஒரு நண்பனல்ல, ஆனால் அது ஒரு பகைவனாகும். ஒவ்வொரு புது இயந்திரமும், ஒவ்வொரு புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட கருவியும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகட்குத் தொழிலில்லாமலாக்கி தெருவில் திண்டாடவிட்டு விடுகின்றது. கண்ணாடி ஆலைகளிலே ஒரு மனிதன் இப்பொழுது ஒரு மணி நேரத்துக்கு 3000 புட்டிகள் செய்கின்றான். பழைய காலங்களிலே இப்படிப்பட்ட வேலைக்கு 77 மனிதர்கள் வேண்டியிருந்தது. இது என்ன ஆகின்றதென்றால், புட்டிகள் செய்யும் ஒவ்வொரு இயந்திரமும் அந்த வேலையில் ஈடுபட்டிருந்த 76 மனிதர்களுக்கு வேலையில்லாமற் செய்துவிடுகின்றது. ஆகவே தன் சோற்றுக்குள்ள வழியை ஒழித்து விடுகிற இந்த இயந்திரத்தை அமெரிக்கத் தொழிலாளி வெறுக்கிறான்.

ஒரு அமெரிக்க ஆசிரியர், "இயந்திரங்கள் ஒன்றையொன்று வளர்க்கின்றன; அவைகளின் தொகை பெருகுகின்றன. நாமே அவற்றிற்குப் பால் வார்த்து வளர்த்தோம். இப்பொழுது நம்மையே அவைகள் சூழ்ந்துகொண்டன; நாம் அவற்றின் கொடுக்கிற் சிக்கிக்கொண்டோம்" என்று எழுதுகின்றார்.

ஆனால் ரஷ்யாவில் இது எப்படி இருக்கின்றது? இயந்திரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு உழைப்பு எளிதாகும் உழைக்கும் நேரம் குறைவுபடும்; எல்லோருடைய வாழ்வும் இலகுவும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருக்கும்.

இங்கே ஆலைகள் கட்டுவது எதற்காகவென்றால், வறுமையை ஒழிக்க; பிணியைப் போக்க; தொழிலில்லாத் துயரத்தைத் தொலைக்க; உயிரை வாங்கும்படியான கடின வேலைகளை அகற்ற; மனித வாழ்க்கையை ஒழுங்கும் நீதியுமான முறையில் நடைபெறுவிக்க—இவைகட்காகவேயாகும்.

சமதர்ம முறையில் ஆலைகளைக் கட்டுவது எதற்காகவென்றால், எத்தனை இயந்திரத் துணைவர்கள் நமக்கு இருக்க முடியுமோ, அத்தனையையும் அமைத்துக்கொள்வதற்காகவேயாகும். இயந்திரங்கள் அமைப்பது எதற்காகவென்றால், அவைகள் எல்லோருக்கும் உடமையாகி, எல்லோருக்கும் ஒன்றுபோல் உழைப்பதற்காகவேயாகும்.

உற்பத்தியும் சரி, அதனைப் பங்கிட்டுக் கொடுக்கும் பொறுப்பும் சரி, இரண்டும் ஆளும் அரசாங்கத்துக்கே இருக்க வேண்டும். ஏனெனில், அரசாங்கம், மக்களுடைய பொருள். அந்த மக்களுக்குச் சொந்தமானதே, கதிர் குலுங்கும் கழனிகளும், சுழன்று உருளும், இயந்திரங்களும், தோண்டியெடுக்கப்படும் தங்கமும் நிலக்கரியும் — என்று கூறப்படுவதுதான் சமதர்ம முறையாகும்.

இந்தச் சமதர்ம முறை ஏற்பட வேண்டுமென்பதன் முதல் படிக்கட்டாகவே, **தொழில்கள் அனைத்தும் தேசீயமயமாக்கப்பட வேண்டும்** என்று முற்போக்குக் கருத்தினர் வலியுறுத்தி வருகின்றனர், இந்த உபகண்டத்தில்.

ஆனால் நேருவும் சரி, அவரது செல்லப்பிள்ளையாக விளங்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும்சரி இந்த விஷயத்தில் தெளிவாக இல்லை. அமெரிக்காவிடம் பணம் வாங்குவதற்காகப் போயிருக்கும் டி. டி. கே. "இந்திய சர்க்கார் அவசரப்பட்டு, தனியார் தொழில்களையெல்லாம் எடுத்து நடத்தாது" என்று தினசரி உறுதிமொழி அளித்தவண்ணமே இருக்கிறார்.

அமெரிக்கருக்கு சமதர்மமுறை பிடிக்காது! அவர்கள் முதலாளிகள்!—அவர்களிடமிருந்து பணம் வாங்கவேண்டும் என்றால், இப்படி பல்லிளித்தால்தான் முடியும்.

பணம் இல்லாவிடிலோ, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், நடத்த இயலாது. எனவே, இப்படி உறுதி அளிக்கப்படுகிறது! பிச்சை பாத்திரம் ஏந்துகிறார்கள்!

* * *

இதற்குக் காரணம், நேரு சர்க்காரிடம், நெஞ்சுரமும், "மக்களின சொத்தே நாடு" என்கிற கொள்கையின் மீது நம்பிக்கையும் இல்லாததுதான்.

முதல் ஐந்தாண்டுத்திட்டத்தை இரஷ்யர்கள் தீட்டிய போதும் சரி, இப்போது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுகிற கட்டத்திலிருக்கிறார்களே இப்போதும் சரி, **தெளிவான கொள்கையும் திட்டமிட்டு எதையும் சாதிக்கும்** திறனும் இருக்கிறது.

இங்கே, தெளிவு இல்லை! திட்டம் தீட்டித் தருவதோ பிர்லாவுக்கும் டாடாக்களுக்கும் வேண்டியவர்கள்!! இதனால், **உற்பத்தியாருக்காக, வரும் இலாபம் எங்கே போகும், எப்படி பொருள்கள் விநியோகிக்கப்படும்** என்கிற கொள்கையையே வரையறுக்க முடியவில்லை.

பீடம் எழுப்பாமல் கோபுரம் கட்ட நினைக்கிறார் நேரு! அதனால்தான், கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்பட்டும், மக்கள் மன்றத்தில் ஒரு புத்தெழுச்சி இல்லை!!

அது ஏற்பட வேண்டுமாயின் 'இரு முனை'களைப் பற்றியும் நன்றாக உணர்ந்து, எந்த முனை நமக்கு உகந்தது என்பதை வரையறுத்துக் கொள்ளவேண்டும். அதனால்தான், திராவிட முன்னேற்றக் கழகம், தனது அரசியற் கொள்கையை சமதர்ம அடிப்படையில் அமைத்துக் கொண்டிருக்கிறது—பிரபுத்துவ முறைகளை வெறுத்து வருகிறது. ★

## ஆடம்பரந்தான் மிச்சம்!

ஓட்டல் வைத்திருக்கிறேன்! எல்லோரும் வருக, அறுசுவை யுண்டி பெறுக!! — என்று விளம்பரம் செய்துவிட்டு, விருந்துண்ணும் ஆசையுடன் பலர் வந்து கூடியதும், அவர்களையெல்லாம் அழைத்து வெறும் தட்டுகளை வைத்தால் எப்படி யிருக்குமோ?—அதுபோல இருந்தது என்று குறிப்பிடுகிறார் மலேயாத் தோழர் ஒருவர்! அங்கே, சுதந்திர விழாவை யொட்டி நடைபெற்ற தொழிற் கண்காட்சியில் இந்தியாவும் பங்கேற்குமென்றும், இந்தியாவின் சாதனைகளையெல்லாம் காணலாமென்றும் பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாம். "சுதந்திர இந்தியா! அதுவும் ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழித்திருக்கிறதே!! அபாரமான தொழில் வளர்ச்சியைப் பெற்றிருக்கும்", என்கிற ஆசையில் பலர் சென்று பார்த்தனராம். வளர்ச்சி தெரியவில்லை! மாறாக ஓரிரு துணித் தயாரிப்புகள் மட்டும் காணக் கிடைத்தன என்கிறார்!! என்ஜின் தயாரிக்கிறோம்—சைகிள் செய்கிறோம்—மோடார் கூட செய்யப்படுகிறது—டிராக்டர் உண்டு—என்றெல்லாம் சொல்லுகிறார்களே, இவைகளையெல்லாம் கொண்டு வந்து காட்டினால்தானே, பார்ப்போரிடையில் விளம்பரம் பெருகும், வியாபாரம் செழிக்கும், என்று குறைபடுகிறார், மலேயா நண்பர்.

உண்மையில் இந்த நோக்கங்களுக்காகத்தான் பல்லாயிரக் கணக்கில் பணத்தைச் செலவிட்டு, வெளிநாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளுக்கு தமது பொருள்களைக் கொண்டு போகிறார்கள். அப்படிப்பட்ட கண்காட்சியில், இந்தியா கலந்துகொண்டது! ஆனால் காண்பதற்கு, பொருள்கள் எதுவும் இல்லையாம்!!

தட்டிலிருந்தால்தானே எடுத்து வட்டிக்க முடியும்? வெறும் விளம்பரத்தால்மட்டும் கியாதியைப் பெருக்கிக்கொள்ள இயலுமா! இயலும் என்றே கருதுகிறது, டில்லி.

இந்த இலட்சணத்தில் அண்மையில் டில்லி அறிவித்துள்ளது, "இன்னும் ஆறு மாத காலத்திற்கு அந்நியப் பொருள்கள் இறக்குமதி கிடையாது! ஏற்றுமதியை அதிகரிக்கப் போகிறோம்!!" என்று. ஏற்றுமதியை அதிகரிக்கப்போகிறார்களாம் — அதுவும் வெளிநாடுகளுக்கு!!

என்ன பொருள்களை ஏற்றுமதி செய்வர்? அப்பளாம், வடாமா, திரிக்கப்பட்ட கயிறுகளையா, முடையப்பட்ட மூங்கில் பாய்களையா, என்று தெரியவில்லை. வெளிநாடுகளுக்கு இந்தியா ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்கள் எல்லாம், கைத்தறித் துணிபோன்ற பொருள்கள்தான். இதற்கும் பெரியதொரு 'மார்க்கெட்' தேடப்படவில்லை. இந்த இலட்சணத்தில் வெறும் ஜம்பத்துக்காக, "வந்து பாரீர் இந்தியாவின் சாதனைகளை", என்று விளம்பரப்படுத்துவானேன்! ஏதேதோ காணப்போகிறோம் என்று வருவோருக்கு இரண்டொரு ஆடைகளைக் காண்பித்து ஏமாறும்படிச் செய்வானேன!!




மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் திருநாமம் என்றும் நின்றும் நிலவுமளவில் சென்னைக்கருகில் ஒரு 'காலனி' அமைக்கப்பட்டிருப்பதை அண்மையில் அறிவித்து நமது அமைச்சர்கள் ஆனந்தம எய்தியதை அறிவோம்! அதே அமைச்சர்கள்செல்லுமிடந்தோறும் திராவிட நாடா! அது எது! எந்தத் தியாகி அதனைஏற்றுக்கொள்வர்? என்றெல்லாம்பேசத்தவறவில்லை. திரு. வி. க. திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினரல்ல. எனினும் அவர், திரு. அ. கு. பாலசுந்தரனார் B A., L.T., தீட்டிய "திராவிட நாடு" பற்றிய சிறந்த பூகோள நூலொன்றுக்கு 2—2—1949 தேதியிட்டு, ஒரு 'மதிப்புரை' வழங்கினார்கள். திரு. வி. க. வழங்கிய மதிப்புரை இதோ!!

★

"இந்நாளில் நமது தென்னாட்டில் ஒருவித முழக்கம் எழும்பிய வண்ணமிருக்கிறது. அஃது எது? அது 'திராவிட நாடு' 'திராவிட நாடு' என்னும் முழக்கம். அம் முழக்கத்தின் பயனாகத் திரண்டு வரும் அமைப்புக்கள பல.

திராவிட நாடு எது?'திராவிடம்' வழங்கும் நாடு 'திராவிட நாடு' என்று எவருங் கூறுவர். திராவிடம் என்று தோன்றியது? இன்றா? நேற்றா? அது தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறல் இயலவில்லை. அது தொன்மை வாய்ந்தது. திராவிட நாடு தொன்மை வாய்ந்ததெனினும், அஃது இன்னும் உயிர்ப்புடன் நிலவுகிறது. இது திராவிடத்தின் செவ்விய பண்பாட்டைப் புலப்படுத்துகிறது.

திராவிட நாட்டின் தொன்மை, 'மகேஞ்சதாரோ' 'ஹாரப்பா' முதலியவற்றைப் பற்றி எழுந்துள்ள ஆராய்ச்சிகளான் இனிது விளங்குகிறது. 'பஞ்ச திராவிடம்' என்றொரு வழக்கு உண்டு. இவ் வழக்குச் சரித்திர காலத்தையுங் கடந்தது. தென்னாட்டிற் பிறந்து, வடநாடு போந்து, அதை அறிவால் பல வழியிலும் பண்படுத்திய ஆதி சங்கரர் 'திராவிட சிசு' என்று திருஞானசம்பந்தரைப் போற்றினர். அப்போற்றி எழுந்து பல நூறாண்டுகளாயின. அறிஞர் சுந்தரம் பிள்ளையின் 'மனோன்மணியத்தில்' 'திராவிடம்' வீறுவதைக் காணலாம். கவி ரவீந்திரரது நாட்டுப் பாட்டில் 'திராவிடம்' அணி செய்தல் வெள்ளிடைமலை. இருமொழிப் புலவர், யாழ்ப்பாணம்-சபாபதி நாவலர் இயற்றிய ஒரு நூல் 'திராவிடப் பிரகாசிகை' என்ற தலைப்பைத் தாங்கி நிற்றலும் ஈண்டுக் கருதப்பாற்று.

திராவிடத்துக்கு உரியவர் எவர்? திராவிடர் என்று சொல்லலும் வேண்டுமோ? 'திராவிடர்' என்னும் சொற்குப் பொருளென்னை? பலதிறப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்றை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன். அஃது 'ஓட்டுகிறவர்' என்பது.

'ஓட்டுகிறவர்' என்பதற்குத் தன்னலப் பேயை ஓட்டுகிறவர் என்று பொருள் விரிக்கலாம். தன்னலப் பேயை ஓட்டலாவது பொதுமைத் தெய்வத்தை நிலைபெறுத்துவதென்க. பொதுமை அறம் பழந் திராவிட மக்களது பண்பாட்டின் விளைவு. இதற்குச் சான்றுகள் பல தேடவேண்டுவதில்லை. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' 'அந்தணரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்— செந்தண்மை பூண்டொழுக லான்' 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' 'தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்--மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமின்' 'எல்லார்களும் ஏத்தும் ஈசன்' 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'எவ்வுயிரும் என்னுயிர் போல்எண்ணி இரங்கவும்நின்-தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே' 'எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போல் எண்ணி......' எனவரூஉஞ் சான்றோர் மொழிகள் சில சாலும்.

திராவிட நாடு ஒருபோது நாவலந்தீவாய்த் திகழ்ந்தது; மற்றொருபோது பரதகண்டமாய்ப் பொலிந்தது; பின்னை விந்தியம் வரை இழிந்தது; இடை இடையே பலதிற மாறுதல் அடைந்தது; இப்பொழுது தமிழ் தெலுங்கு கன்னடம மலையாளம ஆகிய நான்காய் அவற்றுள் ஒன்றிக் குலவுகிறது.

திராவிட நாட்டில் குடியேறி நிலைத்தவர் பலர். ஒரு நாட்டில் குடியேறி நிலைத்தவர் பண்பாடும்; பழங்குடி மக்கள் பண்பாடும் நாளடைவில் ஒன்றுபடுவது இயற்கை. இவ்வியற்கைப்படியே திராவிட மக்கள் பண்பாடும், குடியேறிய மக்கள் பண்பாடும் ஒன்றுபட்டன. தொடக்கத்தில் இருசாரார்க்கும் பூசல் விளைந்தது உண்மை. அப்பூசல்களை வரலாற்று நூல்களில் பார்க்கலாம். வரலாற்றை ஆராய்ச்சிக்கு உருகருவியாகக் கோடலே அறிவுடைமை. அதை வேற்றுமை வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது அறிவுடைமையாகாது. பல்லாண்டுகட்கு முன்னர் பிணங்கிப் போராடிய எத்துணையோ சமூகங்கள் நாளுக்கு நாள் பிணங்குவதை விடுத்து இணங்கி இணங்கி வாழ்வு பெறலாயின. இதற்குச் சரித்திரச் சான்றுகள் பல உள்ளன.

இந்நாளில் திராவிட நாடு என்னும் பெயரால் ஓர் இயக்கம்

முகிழ்த்து வருகிறது. அவ்வியக்கத்தின் நோக்கங்கள், திராவிட நாடு சுரண்டலுக்கு இரையாகாதவாறு அதைக் காப்பதும், அதன் பொருட்டுத் திராவிடத்தின் பண்டை இயல்புக்கும் இக்காலத்துக்கும் உரிய பொதுமை அறத்தை அதன்பால் வளர்ப்பதும், அவ்வறத்தை வடபுலத்தும் அன்பால் புகுத்துவதும், அவ்வழி இந்தியாவை ஒருமைப்படுத்துவதும், உலகுடன் ஒத்து வாழ்வதும், இன்ன பிறவுமாம். திராவிட இயக்கம் சாதிமத வேற்றுமைகளைக் கடந்தது; மக்களை ஒருமைப் படுத்துவது. அதனடியில் இகல், பகை, காழ்ப்பு, பொருமை முதலிய அனல் கனல்வதில்லை. திராவிட இயக்கத் தொண்டு — அருளை — அஹிம்சையை—அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது கண்கூடு.

திராவிட இயக்கம் ஒரு கொள்கையுடையார்க்கே நலஞ்செய்ய முகிழ்த்துள்ளது என்று சில இடங்களில் கருதப்படுகிறது. அது தவறு. திராவிட இயக்கத்தின் பயனாக உருக்கொள்ளும் 'புதிய திராவிட நாடு' பலதிறக் கொள்கையுடையார்க்கும் இடந்தருவதாகும் என்பதில்ஐயமில்லை. கருத்து வேற்றுமைகளுக்கு இடந்தாராத நாடு இயற்கை வழி வளர்ச்சி பெறுதல் அரிது. அதைச் சிறை நாடு என்றுகூறல் மிகையாகாது. கருத்து வேற்றுமைக்கு இடந்தரும் நாடே இயற்கை வழி வளர்ச்சியுறும். கருத்து வேற்றுமை வளர வளர உண்மை விளங்கிக்கொண்டே போகும். இதுபற்றிய விரிவுரை ஈண்டைக்கு வேண்டுவதில்லை.

'திராவிட நாட்டால்' நற்பயன் விளையுமென்று எதிர்பார்க்கிறேன், இப்போது நாட்டை அரித்து வரும் வகுப்புவாதம் சாதிப்பிணக்கு, கண்மூடி வழக்கவொழுக்கம் முதலியவற்றை நீறுபடுத்தும் என்று நினைக்கிறேன்; மக்களை ஒருமைப்படுத்தித் தோழமையைப் பெருக்குமென்று நம்புகிறேன்.

*திராவிடம் வெல்க!*
*இந்தியா செழிக்க!!*
*உலகம் ஓங்க!!!*

★

# அது தந்த பலன், பல!

"ஆங்கிலமா? செச்சே! அது, கூடாது. தேசீய மொழியை விட்டு அதனைக் கற்பது அழகாமோ! ஆகாது. ஆகாது", என்று நிமிர்ந்த நெஞ்சுடன், வாதிடும் 'பெரியவர்கள்' வடநாட்டில், ஏராளம் இருக்கிறார்கள். ஆங்கிலத்தை வெறுப்பதே, தமது தேசபக்தியின் அடையாளம் என்று கருதுகிறார்கள், இவர்கள். இதனால், எதுவும் அற்ற இந்திக்கு ஏற்றம் அளிக்கவும், அதையே இப்பரந்த பூபாகத்தின் ஒரே மொழியாக்கவும் ஆர்வமும் ஆசையும் காட்டுகிறார்கள். ஆங்கிலத்தால், இந்திய உபகண்டத்து மக்கள் பெற்றுள்ள ஏற்றங்கள் சாதாரணமானவையல்ல, வெளியுலகில் பரவிய விஞ்ஞான சாதனைகளும், அறிவுக் கருத்துக்களும் ஆங்கிலம் இன்றேல் இந்தக் கண்டத்துக்குள் நுழைந்திருக்க முடியாது. சாக்ரடீசின் திருநாமமும், மார்டின் லூதர் செய்த மறுமலர்ச்சியும், மார்க்சின் சிந்தாந்தம், கூட்டுறவு முறையும், மின்சார விளக்கும், ஓடும் இரயிலும், பாடும் ரேடியோவும், அவைகளைப் பற்றிய விளக்கங்களும் 'ஆங்கிலம்' இல்லாதிருந்தால், இங்கு தோன்றியிருக்க முடியாது. அன்று மட்டுமல்ல, இன்றும், உலகமேடையில் ஆங்கிலம் பெற்றிருக்கும் இடம் சாதாரணமானதல்ல! அரசியல் துறையினருக்கும் சரி, விஞ்ஞானப் பெருந்தகைகளுக்கும் சரி, அம்மொழியே தத்தம் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளவும், தாம் கண்டவைகளை எடுத்துரைக்கவும் பயன்பட்டு வருகிறது.

*

**அதிசயம்! அதிசயம்!!**

**ஈசன்மீது ஈச்சமரத்தின் பக்தி.**

**மாலையில், கோயில் மணி அடித்ததும், விழுந்து கும்பிடுகிறது.**

**காலையில், எழுந்து நிமிர்ந்து நிற்கிறது.**

**அதிசயம்! ஆனால் உண்மை!!**

இப்படியொரு செய்தி எங்கும் பரவலாயிற்று! ஏடுகள் யாவும், படம் எடுத்துப் போடலாயின. ஈசனைப் பற்றி விவாதிக்கும் நிரீசுரவாதிகளே, இதோ பார்மின், இதற்கென்ன பதில் சொல்மின், ஆண்டவனின் சித்து தவிர வேறென்ன — என்று அம்புகள் பாய்ச்சலாயினர், ஆஸ்தீகர்கள். அறிவு வாதிகளுக்கும், என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைப்பும் குழப்பமும் அதிகரிக்கலாயின. சென்று பார்த்தாலோ, சரியாக மாலை நேரம் வந்ததும் கோயில் மணி அடிக்கிறது—மரமும் மண்ணை நோக்கிச் சாய ஆரம்பிக்கிறது! காலையிலோ எழுந்து நிற்கிறது!! இது, அதிசயம் தவிர வேறென்ன? இந்த அதிசயத்துக்கு, அறிவு வாதிகள், என்ன பதிலை அளிப்பார்கள்? மேல் நாடுகளாகயிருந்தால், அவ்வளவு பரபரப்பு ஏற்பட்டிருக்காது. அறியாமையும், எதையும் ஆண்டவனுடன் பொருத்தி வைத்து 'பொருள்' தேடும் மதியினரும் நிரம்பிய பூமியான இந்திய உபகண்டத்தில் பரித்பூர் எனும் இடத்தில்தான் இந்த அதிசயம் நடந்தது. ஆயிரக்கணக்கான மக்கள், 'ஈச்சமரக் கடவுளை' தரிசிக்க யாத்திரை வரலாயினர்! எங்கும் ஒரே பரபரப்பு!! "ஈச்ச மரத்துக்குப் படையிலிட்டு, அதை உண்டால் தீராத நோய்கள் எல்லாம் தீரும்", என்று ஒரு எத்தன் கதை கட்டிவிட்டான், கேட்கவும்

வேண்டுமா? எதிரேயிருந்த கோயிலைக்கூட மக்கள் மறந்தனர்! ஈச்ச மரம், தூபதீப நைவேத்யங்களுக்காளாயிற்று!!

ஆனால், ஒரே ஒருவருக்கு மட்டும், 'இது ஏன்? எப்படி?' என்கிற கேள்விகள் எழும்பின. வந்தார்! காலையிலும் மாலையிலும் அம்மரத்தைப் புகைப் படங்கள் எடுத்தார்!! என்ன காரணத்தால் இம்மரம் சாயவேண்டும், மீண்டும் எழவேண்டும் என்று தீவிரமாக யோசித்தார். கருவியொன்றைக் கண்டுபிடித்து, அம்மரத்தை நன்ருகத் துருவித் துருவி ஆராய்ச்சி செய்தார். பகல் முழுதும் பெறுகிற வெப்பம் காரணமாக அம் மரம் மாலையில் சோர்ந்து சாய்கிறது! வெப்பம் குறைந்ததும், கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்கிறது!!—என்கிற உண்மையைக் கண்டு வெளியிட்டார்.

ஒப்புக்கொள்ள வேண்டுமே பிறர்? அதனால், அவர் ஏனைய மரங்களையும், தான் கண்டுபிடித்த கருவியைக் கொண்டு ஆராய்ச்சிகள் செய்தார். சில மரங்கள், மாலையில் வாடிவிடுவதையும், தூங்குமூஞ்சி மரங்களின் இலைகள் இரவில் 'தூங்குவதையும்' போன்ற பல உண்மைகளைக் கண்டார். இந்த ஈச்சமரத்தில், வழக்கத்துக்கு மாருக, உணரும் சக்தி படைத்த 'செல்'கள் அதிகமிருப்பதால் இவ்வண்ணம ஏற்படுகிறது, வெப்பத்தால் மட்டுமல்ல மரங்களும் சூழ்நிலை காரணமாக பல மாறுதல்களுக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொள்ளுகின்றன, என்கிற உண்மையை வெளியிட்டார். அறிவுலகம், வியந்தது! மரம் செடி கொடிக்குமா உயிருள்ளது?—உணர்ச்சியுள்ளது?—என்று பலர் கேள்விகள் எழுப்பினர்!! அதற்கெல்லாம் தக்க விடை தந்து, நிலையான புகழைத் தேடிக்கொண்டார், அந்த ஆராய்ச்சியாளர்.

ஒரு சமயம் அவருக்கு, ஏன் இரவில்தாமரை கூம்பிவிடுகிறது? அல்லி மலருகின்றது?—என்கிற ஐயம் எழுந்தது.

"கதிரவனைக் கண்டால் கமலம் மலருவாள்! சந்திரனைக் காணிடின் அல்லிக்கு ஆனந்தம்! ஆகவே, காதலனைக் கண்டு காதலிகள் முகம் மலர்வதுபோல, இவைகளும் மலருகின்றன", என்பது தானே, சாதாரணமாகக் கவிஞர்கள், எழுதி வருகிருர்கள். ஏன்?—என்கிற எண்ணம் எழுந்தது, இவருக்கு.

ஒரு இரவு! சந்திரன் முளைக்காத அமாவாசை இரவு!! ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு, இவர், அல்லிக்குளத்துக்குச் சென்ருர். கவிஞர்கள் கூறுவது போல, காதலனும் மதியில்லாத காரணத்தால், கமலங்கள் மூடிக் கிடக்கவில்லை — மலர்ந்திருந்தன. சூரியன் எழுந்த உடனும் அவை, கூம்பிவிடவில்லை. காலை மணி 11-க்கு மேல்தான் குவியத் தொடங்கின. இந்த உண்மையைக் கண்டு, இதற்கும் காரணம் அவைகளின் உடல் கூறுதான் என்று ஆராய்ச்சி மூலம் தட்பமும் வெப்பமுமே காரணம் என்று அறிவித்தார். இப்படி உலகுக்கே உன்னதமான ஆராய்ச்சிகளையும் அறிவிப்புகளையும் கண்டுபிடித்துச் சொன்ன பெரியாரே வங்கம் தந்த ஜகதீச சந்திரபோஸ் ஆகும்.

*

அவர், இந்தளவுக்கு. ஆராய்ச்சித் துறையில் கவனம் செலுத்தக் காரணமாயிருந்தவர் கல்லூரிப் பேராசிரியராயிருந்த லீவ் வான்ட் என்பவராகும். இவர் ஒரு ஆங்கிலேயர்! போசுக்கும் ஆங்கில அறிவு இருந்ததால், உலக விஞ்ஞானிகளின் தத்துவங்களை அறியவும், தான் அறிந்ததை வெளியாருக்கு உணர்த்தவும் முடிந்தது. இதனல் அவர், தாய் மொழியாகிய வங்கத்தை மறந்துவிட்டு, ஆங்கிலமே சதம் என்று இருந்துவிடவில்லை. தாய் மொழி மீதும் அளவிலாத ஆசையைச் செலுத்தினர்! ஆங்கிலம் உலக மொழி என்பதால், அதையும் கற்ருர்!! ஒரு சமயம், தன் தாய் மொழிப்பற்று குறித்து அவர், "நான் தாய்மொழிப் பள்ளியில் படித்ததால் எனக்கு தாய்மொழிப்பற்று மிகுதியாக உண்டாயிற்று. அதிலுள்ள இலக்கியங்கள் வாயிலாக என் நாட்டின் சிறப்பையும் பண்பாட்டின்—மேன்மையையும் அறிந்துகொண்டேன்" என்று ஆனந்தத்துடன் கூறியிருக்கிருர். போஸ் மட்டுமல்ல, இன்னெரு மேதை சி. வி. இராமன், ஆங்கிலத்தை வெறுத்திருந்தால் உலகப் புகழ்பெற்றிருக்கமுடியுமோ? இவ்வளவேன் இன்று "இந்தியே வேண்டும்" என்று கூறும் நேரு அவர்கள், தினசரி படிப்பதும், வெளிநாடுகளுக்குப்போனல் பேசுவதும் எம்மொழியில்? ஆங்கிலத்தில் தானே!.

தாய் மொழி—உலகத்தோடு பழக ஆங்கிலம். இரண்டுமிருந்தால் போதும். வீணே, இடையில் இந்தி என்ருெரு மொழி வேண்டாம். எண்ணற்ற அறிவையும், விஞ்ஞான விளைவுகளையும் தந்த ஆங்கிலத்தால் நமக்கு ஏற்பட்ட பலனில் கடுகளாவது இந்தியால் கிட்டுமோ! நிச்சயம் கிட்டாது—ஏனெனில், இந்திக்கு இப்போதுகூட வார்த்தைகள் தேடிக்கண்டு பிடித்து வருகிருர்கள்!!

இந்நிலையில், "ஆங்கிலத்தை ஒழிப்போம் — இந்திக்கு அந்த இடத்தைத் தருவோம்" என்று சொல்வது, அறிவுக்கண்களை மூடுவதாகத்தானே பொருள்? சொந்தக் கண்ணும் தாய்மொழியையும் அடைத்துவிட்டு, இருதயக் கண்ணையும் எடுத்தெறிந்துவிட்டால் எதிர்காலம் இருள்மயமாவது தவிர, வழி என்ன?—இதைத்தான், எண்ணிப்பார்க்க வேண்டுகிருேம், நாம்.

★

> "ஒன்றை வைத்திருக்கும் போது அதன் அருமை தெரிவதில்லை. ஆங்கிலத்தை இழந்துவிட்ட பின்தான், அதன் அருமை நமக்குத் தெரியவரும்....ஆங்கிலம் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளப்படவில்லை; மூன்று தலைமுறைகளில் கற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனல், இந்தியில் நாம் இன்னும் ஆரம்பப் பாடமே துவங்கவில்லை. நிலைமை இப்படியிருக்கும்போது, ஒரு குறிப்பிட்டதேதியில் ஆங்கிலத்தை ஒழித்துவிட வேண்டுமென்பது நேர்மையா? நீதியா?"
>
> —ஆச்சாரியார்
>
> செப். 30

# புத்தொளி வேண்டும்

**மதம் வேண்டுமா?** என்ற பிரச்சினை சில நூற்றாண்டுகளாக மனிதனுடைய சிந்தனையைத் தூண்டி வருகின்றது. ஆதிமனிதன் மரங்களிலே, மரக் கிளைகளிலே, மரப் பொந்துகளிலே, மலைக் குகைகளிலே ஆடையின்றி, பேச ஓர் மொழியும் இன்றி வாழ்ந்து வந்தான். இயற்கையின் சூழலிலே வாழ்ந்த அவனுக்கு உதிக்கும் சூரியன், சந்திர வட்டம், சிறி வரும் காற்று, இடி, மின்னல், மழை — இவையெல்லாம் தன் தன் அறிவிற்கு அன்று எட்டாத ஏதோ சக்திகளின் வெளிப்பாடு என்றுதான் தோன்றியது. அவன் அவற்றையெல்லாம் கண்டு வியந்தான்; பயந்தான். ஒளி தரும் இரவியையும், மழை தரும் வானையும், சீறும் காற்றையும் வணங்கி அவற்றைத் திருப்தி செய்ய வேண்டும் என்று எண்ணினான். இல்லாவிடின் அவை தன்னை, தன் சமூகத்தை எங்கே அழித்து விடுமோ என்று அஞ்சினான். இந்த அச்சத்தால் இயற்கைச் சக்திகளை வழிபடும் மந்திரங்கள், பாடல்கள், தொழுகை முறைகள் ஏற்பட்டன. அவற்றை நடத்தி வைக்கக் குருமார் ஏற்பட்டனர். அவர்களுக்கு மரியாதை உயர்ந்தது. நாட்டை ஆளும் வேந்தனும் அவர்களது ஆலோசனைக்குப் பணிந்து நடந்தான்.

இந்நிலையில் தங்கள் செல்வாக்குக் குறையாமல் இருக்கும் பொருட்டு ஜாதீயக் கட்டுப்பாடுகள் வலுப்பட்டன. எவர் உழைப்பால் மக்களுக்கு இன்றியமையாத உணவு உடைபோன்ற பொருள்கள் கிடைக்கின்றனவோ அவர்கள் தாசர்கள் அல்லது அடிமைகள் ஆனார்கள். அவர்கள் கல்வி கற்றுத் தெளிந்தால் மேல் வகுப்பினர்க்கு ஆபத்து என்று கருதி, கற்கவும் அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை, இந்தச் சட்டமெல்லாம் கடவுளால், கடவுள் ஆணையால் இயற்றப்பட்டன என்று வேறு சொல்லி வைத்துவிட்டார்கள்.

ஆகவே மனிதனின் வறுமைக்கும், அவனது தாழ்ந்த நிலைக்கும் கடவுளே காரணம் என்று வலியுறுத்தப்பட்டது. மனிதனுக்குரிய குணங்கள் எல்லாம் கடவுள் மீது ஏற்றப்பட்டன. கடவுளுக்கென்று மாளிகைகள், பல மனைவிகள், பூங்காவனங்கள், கேளிக்கைகள் உண்டு என எழுதிவைத்தனர். இவையெல்லாம் கண்ணுக்கெதிரில் தெரியவில்லையே என்று கேட்டுவிட்டால் கடவுள் பெயரால், கடவுள் ஆணையின் பெயரால் மக்களை அடக்கி ஆளும் வாய்ப்புப் போய்விடுமே என்று அஞ்சி,— அவர் மேலே, வானத்திலே,

**சுடர்**

சொர்க்கத்திலே, பரலோகத்திலே வாழ்வதாகச் சொல்லிவைத்தனர். மனிதனுடைய தொழில், அதன் வருமானம், அதற்கேற்ற வாழ்க்கை, வாழ்க்கையில் உள்ள இன்ப துன்பங்கள்—இவற்றிற்கு ஆதியில் செய்த சாதிப் பாகுபாட்டுமுறை, அரசியல் சட்டம், சமூகக் கட்டுப்பாடுதான் காரணம் என்று கண்டுகொண்டால் கீழ் வகுப்பினரிடையே கொந்தளிப்பு ஏற்படும் என்று கருதி, "துன்பம் நீங்க எல்லாச் சட்டங்களையும் உண்டாக்கிய கடவுளையே கேள்," என்று சொல்லப்பட்டது. அந்தக் கடவுளை நோககி ஆடிப்பாடினால் வரம் தருவார் என்றும் கூறப்பட்டது. ஏழை, கீழ்ச் சாதி மக்கள் முதலியோர் தங்கள் தாழ்ந்த நிலையிலேயே இருக்கவேண்டும், தங்களுக்கென்று கடவுளால் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யவேண்டும், அதற்குரிய வருமானத்திற்கு ஏற்ப தங்கள் தொழிலை நடத்திக் கொள்ள வேண்டும்; வறுமையில் பொறுமை, அடக்கம், திருப்தி போன்ற நற்குணங்களை வளர்க்க வேண்டும் என்று கூறி பல அற நூல்களையும் எழுதி வைத்தனர், சமுதாயத்தின் உயர்ந்த பீடத்திலுள்ள குருமார்.

"என் வறுமைத் துன்பத்திற்கு ஓர் முடிவு வராதா? நல்ல வசதிகள் பெற்று வாழ்பவர்களும் இருக்கின்றார்களே!" என்ற இயற்கையான கேள்வி வந்துவிடும் என்று அஞ்சி "அது ஆண்டவன் செயல்!" என்றான். "கருணைவடிவான இறைவன் எனக்குத் துன்பத்தையும் தருவானோ?" என்று கேட்டான். "இன்பமும் துன்பமும் உனக்குள்ளேயே!" என்று சொல்லிவிட்டான். "முயற்சி போதாது; முயற்சி திருவினையாக்கும்!" என்றான்; "முயன்றும பயனில்லையே?" என்றான்; "நலக் கிரகாதிகள் செயல்!" என்ற பதில் வந்தது. "சோதிடம் பார்த்தேன்; இப்பொழுது புதன் திசை நடக்கிறது; பொருள் கிடைக்கவில்லையே!" என்று வினவினான்; "கிரகங்களையும் கடந்த தனி சக்தி பரலோகத்தில் ஒன்று உண்டு

அதன் செயல்!" என்ற விடை வந்தது. "உலகில் உள்ள அத்தனை மக்களுக்கும் இன்னாருக்கு இன்னபடி இன்ன நேரத்தில் இன்னது நடத்தவேண்டும் என்ற திட்டம் முன் கூட்டியே அந்தச்சக்தி வகுத்திருக்கின்றதா?" என்று அங்கலாய்த்தான்; "அந்தச்சக்தி எந்தக் குணங்களும் அற்றது--அது நிர்க்குணப் பிரம்மம்—உன் ஆத்மா போன பிறவியில் தீவினை செய்தது; நீ ஏன் நல்வினை செய்யவில்லை?" என்ற மாற்றம் வந்தது. இவ்வாறு பலருடைய துன்பத்திற்கும், சிலருடைய இன்பத்திற்கும் காரணம் அவன், அவன் விதி, அவன் கர்மா, அவன் முன் வினைப்பயன், ஆண்டவன் செயல், கிரகங்களின் பலன் என்று புதிய பொய்த் தத்துவங்களைப் புகுத்தி, எப்படியும் சமுதாயச் சட்டத்தை மேலென்றும், கீழென்றும் வகுத்த தன் சாணக்கியத்தை மட்டும் மறைத்துக்கொண்டான் மத தந்திரி. இதற்கு மேல் வறுமையால் திருடு போன்ற குற்றங்கள் செய்தால் நரகம் உண்டு என்றும், வறுமையில் பொறுமையோடு இருந்தால் சொர்க்கத்தில் உண்டு உறங்கலாம் என்றும் நரகமும் மோட்சமும் சிருட்டிக்கபபட்டன.

"எல்லாம் கடவுள் செயல்!" என்று கூறிக் கடவுளை வணங்கிக் கவலையை மறக்கக் கோவில்கள், விழாக்கள், விரதங்கள், ஏற்பட்டன. பிறகு அந்தக் கோவில்களிலும்கூடச் சுரண்டல் புகுந்தது. கடவுளுக்குப் படைப்பதில் பூசாரிக்குப் பங்கு கேட்கப்பட்டது. சுவையோடு உண்டு பழகிய பூசாரி, சத்தான பால், பழங்களே இறைவனுக்குப் பிரீதி என்றான். "எல்லாம் பூசாரியே கொண்டுபோய் விடுவதா?" என்ற கேள்வி வந்துவிடுமே என்று அஞ்சி, "மீதத்தை நீ கொண்டுபோகலாம்" என்றான். "கடவுளுக்கு நிறையப் படைக்க என்னிடம் பொருள் இல்லையே!" என்று ஏழை கேள்வி எழுப்புவானே என்று கருதி, "நீ அன்போடு தந்தது எதுவானாலும் ஆண்டவனுக்குப் பிரீதி" என்றான். "நாங்கள் புலால் அருந்துவேனே! இறைவனுக்குப் படைக்கப் பாலும் கனியும் இல்லையே!" என்று பாட்டாளி கேட்பானே என்று கருதி, ஆடு, மாடு போன்ற உயிர்ப்பலி கேட்கும் வாளேந்திய கோர தெய்வங்கள் ஏற்பட்டன, மனிதனுடைய சக்தியைவிடத் தெய்வ சக்தி மீறியது என்ற கருத்தைப் புகுத்தத் தெய்வங்களுக்குப் பல தலைகளும் பல கைகளும் ஏற்பட்டன. "தெய்வங்களுக்கிடையிலும் கோள், பொறாமை, பூசல், சண்டைகள் உண்டு" என்று சொல்லிவிட்டால் மனித சமூகத்தில் இவையெல்லாம் இருப்பது சகஜமே; இவற்றை அறவே நீக்க முடியாது" என்ற கருத்தைப் புகுத்தப் பல தெய்வங்கள், அவர்களுக்கிடையிலே பூசல்கள், போர்களை விளக்கும் புராணங்கள் ஏற்பட்டன.

எப்படியும் "எல்லாம் ஆண்டவன் செயல்; தன் செயல்; கிரகங்களின் செயல்; முன் பிறவியில் செய்த வினையின் பயன்" என்று கூறிச் சமுதாயத்தில் உள்ள கட்டுப்பாடுகளை மட்டும் மாற்றிவிடக் கூடாது என்ற மத தந்திரியின் கருத்துக்கள்தாம் மதம் உருவத்தில் நிலைத்து வந்தன. "மதம் என்ற போதையைத் தந்துவிட்டால் பாமரன் அதிலேயே சொக்கிக்கிடக்கட்டும்; இது ஏன்?' என்ற கேள்வி எழுந்தால் தன் உயர்நிலைக்கு ஆபத்து என்ற ஒரே அச்சம்தான இவற்றிற்கெல்லாம் காரணமாகும். இந்த அச்சம்தான் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், இதிகாச புராணங்கள், பதினென் புராணங்கள், முப்பது முக்கோடி தேவர்கள், சொர்க்கம், வைகுந்தம், தேவலோகம், கற்பக விருட்சம், பாரிசாதம், சங்க நிதி, பதும நிதி, நரகம், பதினாலு லோகங்கள், ஆண்டவன், ஆத்மா, பரமாத்மா, அருட்பெருஞ்சோதி, கர்மா, தலைவிதி, பல பிறவிகள், கோவில், உற்சவங்கள், விரதங்கள், நாமம், பூணூல், திருநீறு, திலகம், காவியுடை, கமண்டலம், சடை, புலித்தோல், பஞ்சகச்சம் உருத்திராட்ச மணி, நல்ல நாள், சகுணம், தோஷம், வேதாந்தம், சித்தாந்தம், ஞானம், காயகற்பம், துறவறம், பூசை, ஜெபம், மந்திரம், மடாதிபதிகள், என்று இப்படி பல்வேறு மத நூல்களைச் சிருட்டித்துவிட்டார்கள்.

இப்பொழுது புத்தன் வந்தான்; "ஆண்டவன் வல்லவன், ஆனால் நல்லவன் அல்லன; நல்லவன் ஆனால் வல்லவன் அல்லன்; ஆண்டவன் நல்லவனும் வல்லவனும் ஆனால் உலக மக்களிடையே இவ்வளவு துன்பம் ஏன?" என்று கேள்வி எழுப்பினான். ஆண்டவனை மறுத்தான்; ஜாதீய முறைகளை வெறுத்தான், "மக்கள் எல்லாம் ஒரே நிறை; ஒரே விலை; ஓரினம்" என்று போதித்தான். ஆனால் சமுதாய சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசிய புத்தன், "இன்ப துன்பங்களுக்குக் காரணம் மனிதனே; என்றான். "ஆத்மா அழிவில்லாதது; அதற்குள்ளேயே இன்பதுன்பம் நிறைந்துகிடக்கின்றது. ஆகவே வெளியின்பத்தை நாடும் புலன்களை அடக்கி ஆளுக; அவாவை அறுத்து விடுக; அற்றது பற்றெனில் உற்றது வீடு, நிருவாணம்!" என்றான். சமுதாயப் புரட்சிக்கு வித்திட்ட புத்தன் பொருளாதாரப் புரட்சிக்கு வித்திட்டானில்லை.

புத்த, சமண மதங்கள் நாட்டில் வேரூன்றின. சாத்திரம், சடங்கு சாதி வேறுபாட்டில் நின்ற ஆரிய தர்மத்தின வலிமை குறைய ஆரம்பித்தது.

இந்து மத தந்திரிகள் பார்த்தார்கள். "சாதி வேறுபாடு கிடையாது" என்ற கொள்கையின் வலிமை புத்த சமண மதத்தை வளர்த்து வருகிறது என்று கண்டு இந்து மதத்திலும் சாதி வேறுபாடுகள் கிடையா என்ற கொள்கையை ஓரளவுபுகுத்தினர். ஆயினும் அதற்கும் ஒரு நிபந்தனை ஏற்பட்டது. உள்ளன்போடு உருகி வழிபட்டால் (நிபந்தனை) இறைவன்முன அனைவரும் சமமே என்றனர். உருகி வழிபடும் பாசுரங்கள் எழுந்தன. தேவாரம் ஒலித்தது. திருவாசகம் முழங்கியது. பிரபந்தம் வாய் மலர்ந்தது; இக்காலத்தில்தான் நந்தனார் (பறையர்) நாயனாரானார். திருமங்கைமன்னன் (கள்ளர்) திருமாலடியாரானார். தளர்ந்து வந்த இந்து மதம் சற்று வலிமைபெற ஆரம்பித்தது. ஆயினும் இந்துமதத்தில் உள்ள சடங்குகள், ஆசாரங்கள், மூடநம்பிக்கைகள் மட்டும் வேரூன்றித் தழைத்து வந்தன.

இதற்கிடையில் இஸ்லாமிய மதம் கடல் கடந்து வந்தது; முஸ்லிம் வேந்தர் காலத்தில் இஸ்லாம் செல்வாக்குப்பெற்றது. "கடவுள் ஒன்றே; அதற்கு உருவமில்லை; பூசையும் நைவேத்தியமும், மந்திரங்களும் தவறு" என்றது இஸ்லாம். "மக்கள் எல்லாம் சகோத

ர்கள்" என்று அது பறை சாற்றியது. இந்தக் கோஷங்கள் இந்து மதத்திலுள்ள பாமரரைக் கவர்ந்தன. இந்து மதம் தளர்ந்தது; இஸ்லாம் வளர்ந்து பரந்து பரவியது. இந்து மத தந்திரிகள் பார்த்தார்கள்; இந்து மதக் கருத்துக்களை இஸ்லாமியக் கருத்துக்களோடு பொருத்திக் காட்டிப் புதிய போதனைகள் "பக்தி மார்க்கம்" என்ற இயக்கத்தின் பெயரால் புகுத்தப்பட்டன. "கடவுள் ஒன்றே; ஆண்டவனுக்கு முன் அனைவரும் சமமே; ராமும் ரஹீமும் வேறல்ல" என்ற புதிய மெருகோடு பழைய வேதாந்தக் கருத்துக்கள் பரவின.

ஆங்கில ஆட்சி வந்தது: ஜனநாயகக் கருத்துக்களான சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற கருத்துக்கள் வேரூன்றின. ஆங்கிலம் படித்த இந்தியர் ஆண்-பெண் சமத்துவம், பெண் கல்வி, தீண்டாமை ஒழிப்பு, விக்கிரக ஆராதனை ஒழிப்பு போன்ற கருத்துக்களைச் சாதி வேறுபாட்டுப் புரையோடிய இந்து மதத்தில் சிறிது புகுத்தினர். மறுமலர்ச்சிக் கருத்துக்கள் பரவின; இந்து மதத்தின் முக்கிய அம்சமான வர்ணாஸ்தரம தர்மம் (சாதி வேறுபாட்டு முறை) நெகிழ்ந்தது. வேதம், புராணம், இதிகாசம் இவற்றில் நம்பிக்கை குறையத் தொடங்கியது. விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு பெருகியது. "தெய்வம் ஒன்று உண்டு" என்று சொன்னால் ஒப்புக் கொள்ளலாம். அதைத் தவிர்த்து தெய்வத்தோடு, அதன் பெயரால் விளைந்துள்ள மூடநம்பிக்கைகளையோ, சாதி, மத வேறுபாட்டையோ ஆதரிக்கமுடியாது என்ற புதிய அறிவாளர் கூட்டம் நாட்டில் பெருகிற்று. இந்து மதத்தில் சீர்திருத்தம் வந்தது. ஆனால் மதம் மட்டும் அழியாமல் இருந்தது.

ஆங்கிலக் கல்வியின் மூலமாக வேறு இரண்டு புதிய சித்தாந்தங்கள் உலக முழுவதும் பரவின. ஒன்று டார்வினின் பரிணாமவாதம்; மற்றொன்று கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமை முழக்கம் "உலகில் எதுவும் படைக்கப்படவில்லை; எல்லாம் பரிணாம வளர்ச்சியே" என்பது டார்வின் அளித்த சிந்தனை விருந்து. "உலகை ஆண்டவன் படைத்தான்; அவன் எங்கோ இருக்கின்றான்!" என்று மிஞ்சியிருந்த அந்த ஒரே கொள்கையிலும் இடிவிழுந்தது. உலக மதவாதிகள் நடுங்கிவிட்டனர்.

கார்ல் மார்க்ஸ், "உயிர்ப்பொருள், சடப்பொருள் — இவ்விரண்டில் உயிர் (spirit) சடத்திலிருந்து (matter) தோன்றியது. உயிரிலிருந்து சடம் தோன்றவில்லை. ஆகவே எல்லாம் இயற்கை. மனிதனுடைய இன்ப துன்பங்களுக்குக் காரணம் "தவறான சமுதாய அமைப்பே" என்றான். அவன் வைத்த தீ ஐரோப்பாவெங்கும், உலக முழுதும் வெகு வேகமாய்ப் பரவியது; ரஷிய நாட்டில் வெற்றியும் கண்டது.

கடவுள், ஆத்மா, உயிர் என்ற சொற்களை ஆதியில், மதக் குருமார் புகுத்தியது ஏன்? "எல்லாம் அவன் செயல்" என்று ஏதோ ஒரு ஆண்டவன்மீது எல்லாப் பழியையும் போட்டுவிட்டால் --கீழ்ச்சாதியினர் கீழ்நிலையிலேயே இருக்கமுடியும்; அவர்கள் விழித்துக்கொண்டால் தங்கள் நிலைக்கு ஆபத்து என்பதற்காகத்தான். ஆனால் ஜனநாயகக் கருத்துக்கள் சாதி வேறுபாட்டை மாற்றி வருகின்றன. எவரும் எத்தொழிலும் செய்யலாம் என்று ஏற்பட்டுவிட்டதால் சாதீயப் பிளவு முறைகள் மறைந்து வருகின்றன. ஆயினும் ஜனநாயகம் — அதன்மூலம் தனி நபர் சுதந்திரம் — அதன்மூலம் தனி நபர் எத்தொழிலும் செய்ய உரிமை—அதன்மூலம் எம்முறையைக் கையாண்டேனும் பணத்தைச் சேகரித்துப் பாதுகாக்கும் உரிமை — அதன்மூலம் ஏழை — பணக்காரர் பாகுபாடு — அதன் மூலம் முதலாளித்துவ சமுதாய அமைப்பு நாட்டில் தந்திரமாக உருவாக்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டு — சாதியைவிட்டு வரும் சமுதாயம் உயர் வகுப்பு, மத்திய வகுப்பு, கீழ் வகுப்பு என்ற வர்க்க பேதச் சுழலில் சிக்கிக் கொண்டது. அன்று மனிதனுக்கு மனிதன் வேறுபாட்டைக் கற்பித்தது சாதி. இன்று அதே வேற்றுமையைக் கற்பிப்பது வர்க்கம். அன்று உயர்ந்த சாதியானைக் கண்டு கீழ்ச்சாதி மகன் ஒதுங்கி நடந்தான். இன்று உயர் வகுப்பினரைக் கண்டு தன்னையறியாமலேயே கீழ்வகுப்பினன் ஒதுங்கி நடக்கின்றான். அன்று சமூகச் சட்டத்திற்கு அஞ்சித் தங்கள், தங்கள் சாதிக்குள் திருமணம் செய்தனர். இன்று தமது அந்தஸ்திற்குப் பங்கம் வருமேஎன்று அஞ்சித் தங்கள் தங்கள் வர்க்கத்திற்குள் திருமணம் புரிந்து கொள்கின்றனர். அன்று சாதி வேறுபாடு நாட்டைக் கெடுத்தது. இன்று வர்க்க பேதம் நாட்டை உயரவிடாமல் அழுத்துகிறது.

உயர்தர வகுப்பினரிடையே தான் நாட்டை ஆளும் வர்க்கத்தினர் பெரும்பாலும் தோன்றி வருகின்றனர். கடவுள்-ஆத்மா என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தோ இல்லாமலோ போயினும், பொது மக்களிடையே இந்த நம்பிக்கை நிலைக்காவிட்டால் — தமது வறுமைக்கு, துன்பத்திற்கு, நோய்க்குக் காரணமாகத் தம்மை, தம் தலைவிதியை, ஆண்டவன் செயலை, கர்மாவை, முன்வினைப் பயனை, கிரக பலனை, தாம் பிறந்த வேளையை நொந்து மடிகின்ற கள்ளமறியாத மக்கள் — பின்பு ஆளும்கட்சியை, ஆட்சியின் சூழ்ச்சியைப்பற்றிப் பேசுவார்களே என்று அவர்கள் நினைக்கின்றனர். அதனால் அன்று மத குருமார் செய்த அதே சாணக்கியத்தை இன்று ஆளும் வர்க்கத்தினர் கையாண்டு மதவாதிகளை முடுக்கிவிட்டு, "எல்லாம் இயற்கை-யாவும் மதியின் செயலே—மக்களின் நல்வாழ்வே சிறந்த குறிக்கோள்" என்று பேசும் நபர்களைத் தூற்றத் தூபமிட்டு வருகின்றது. எல்லாம் இன்றுள்ள முதலாளித்துவ முறை, ஏழை—பணக்காரர் என்ற பாகுபாடு நிலைக்க வேண்டுமே என்ற ஒரே நோக்கத்தால்தான். கீழ்ச் சாதியினரை ஒடுக்க அன்று ஆண்டவனைக் கையாண்டான் மத தந்திரி; கீழ் வகுப்பினை ஒடுக்க இன்று அதே ஆண்டவனை — ஆத்ம ஜோதியை — இல்லாத வெறும் கற்பனைகளை—மதமென்ற நஞ்சைக் கையாளுகின்றான் இன்றைய ராஜ தந்திரி.

வர்க்க — பேதமற்ற நல்வாழ்வு திராவிட நாட்டில் உருவாக வேண்டும்; அனைவரும் சமம் என்ற எண்ணம் தழைத்து சாதி—மத—பேதமற்ற சமுதாய வாழ்வு மலர நாம் பாடுபடுவோமாக!

★

# திரும்பினார்— வீரராக அல்ல!!

சென்றவர் திரும்பிவிட்டார்— தீராதி தீரராக, வீராதி வீரராக, திருச் செய்தி தருபவராக அல்ல! வழக்கம் போல், "அதனாலென்ன! ஏதோ ஒரு முடிவு!! என்று யாவும் துறந்த முனி புங்கவர்போல், இதோபதேசம் அருள் பவராக!!

நாடு, அதனை எதிர்பார்க்கவில்லை— தேவிகுளம் இழந்தோம், பீர்மேடு போயிற்று, இப்போதாவது 'சக்தி யையும் செல்வாக்கையும்' காட்டி, சரியான நீதி பெற்று வருவார் என்றே நம்பினோம். சென்றார் ஐதரா பாத்! குலவினார் டில்லி மந்திரியுடன்!! அறிக்கையை ஏற்றுக்கொண்டு, திரும்பிவிட்டார் சென்னைக்கு.

திருத்தணியும் அதைச் சார்ந்த சில இடங்களும் தமிழ் நாட்டுக்கு! ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகள் ஆந்திரத்துக்கு!!—என்கிற, 'படாஸ்கர்' முடிவை, ஒப்புக்கொண்டு காமராஜர் வந்துவிட்டார். தமிழகத் தின், 'தலைவிதி' இனி, அவ்வளவு தான். வளம் கொஞ்சும் பகுதிகள் பல, ஆந்திரத்துக்குப் போகின்றன! ஆரணியாறு திட்டம், 'அங்கே போகி றது!! ஆனால், திருத்தணியும் சில இடங்களும், நமக்குக் கிடைக் கிறது.

வரும் இடங்களை வரவேற்கிறோம்! ஆனால், வரவேண்டிய இடங்களை, 'கோட்டை' விடுகிறதே சென்னை சர்க் கார் என்பதற்கு வருந்துகிறோம்— தொடர்ந்து இதுதானா தமிழகத்துக் குக் கிடைக்கும் நீதியெனத் துயருறு கிறோம்!!

செங்கற்பட்டு மாவட்ட மன்றம், தீர்மானம் கூடப்போட்டது—ஆனும் காமராசர், தனது கட்சியைச் சேர்ந் தவர் — ஆகவே எப்படியும், இந்த இடங்களைப் பெற்றுக்கொண்டே வருவார் என்கிற நம்பிக்கையுடன். 'நாமம்' குழைத்துப் போடப்பட்டு விட்டது! திருவள்ளூர், பொன்னேரி தாலுக்காக்களைச் சேர்ந்த பல இடங் கள் பறிபோய் விட்டன!!

ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி அவர்களுடன், அகமகிழ்ந்து குலவினாராம், காமராஜர். மகிழ்கி றோம்! இந்த ஒற்றுமை என்றும், நீடிக்கவேண்டுமெனவும் விரும்பு கிறோம்!! இந்த நட்பினையும் அன்பினை யும் அவரிடம் சொல்லி "ஆரணி யாறு நீர்த்தேக்கத்தால் பயன்விளை யும் பகுதிகளை உங்கட்குத் தரச் சொல்லுகிறாரே, படாஸ்கர். இது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்! தமிழகத்துடன்தானே சேர்ந்திருக்க வேண்டும்" என்று கேட்டு, அதோடு திரும்பியிருந்தால் காமராஜர், தீரர்! ஆனால், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிருட்டினகிரிக்கு அருகி லுள்ள மூன்று ஊர்களையுமன்றோ சேர்த்துக்கொடுத்துவிட்டு வந்திருக் கிறார்!!

இப்படிச் செய்யும் சென்னை அரசு என்பதால்தான், நாம், திருவண்ணா மலை மாநாட்டில் தீர்மானம் போட்டு, "...மக்களின் கருத்தறிந்து அதற்கேற்றபடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு" சென்னை அரசினை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டோம்.

"மக்களின் கருத்தறிவதா! அந்தப் பழக்கம், எமக்கேது? இருந்தால், இன்னும் "தமிழ் நாடு" எனும் பெயர் வைக்காமலேயே சண்டித்தனம் செய்து வருவோமா! இது தெரியா மல் தீர்மானம் போட்டுவிட்டீர்களே" என்று சொல்லுவதுபோல, சென்ற வர், திரும்பிவிட்டார்! உண்மையில், வருந்துகிறோம், இவ்வளவு தூரம் ஆர்வமற்றதாக உளதே இந்த அரசு என்று!!

★

## கவர்னர் மறைவு

சென்னை மாநிலக் கவர்னராக விளங்கிய திரு. ஜான் அவர்கள், எதிர்பாராதவிதமாக இயற்கை எய்திய செய்திகேட்டு, துயரடை வோரின் துக்கத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம். கவர்னராக வரு வதற்கு முன்பே, நாட்டு வாழ்வில் மிகுந்த சிரத்தையும் பொறுப்பும் ஏற்று, தியாகம் பல புரிந்த செம் மல் அவர். சுதந்திரப்போரில், தன்னை அர்ப்பணித்த வீரர். அப் படிப்பட்டவரின் மறைவு, தென் னாட்டின் இழப்பாகும். அவருடைய துணைவியாருக்கும், பிறருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.


# அவரும் கூறுகிறார்


ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாகப் புகுத்துவதனால் நாட் டிற்குப் பெரும் ஆபத்து ஏற்படும் என்று பல அறிஞர்களும், தலைவர் களும் எச்சரிக்கை செய்து வருகின் றனர். இந்தியைப் புகுத்தி ஆங்கி லத்தை ஒழிப்பது துன்பத்தை வலுவில் அழைப்பதாகும் என்று உத்தரப் பிரதேச முன்னாள் கவர் னரும், முக்கிய காங்கிரசுத் தலை வர்களில் ஒருவருமான திரு. கே. எம். முன்சி சூரத் சுழற்குழுக் கூட் டத்தில் பேசுகையில் கூறியுள் ளார்.

"இந்தியா முழுவதிலும் ஆங்கி லம் பெற்றிருக்கும் நிலையை எய் தும் அளவுக்கு, மற்றொரு மொழி வளர்ச்சி அடையும் வரை ஆங்கி லத்தைப் புறக்கணிக்கக்கூடாது. விரைவில் ஆங்கிலத்தை ஒழித் துக்கட்ட வேண்டும் என்று எண் ணுவது தீங்காகும். ஆங்கிலத்தை பேசுவதாலும், கற்பதாலும் நம்து தேசீய உணர்ச்சி கெட்டுவிடும் என்ற தாழ்வான மனப்பான் மையை வளர்த்துவிட்டோம். ஆங் கிலத்தைப் புறக்கணித்ததன் கார ணமாகக் கல்வியின் தரம் குறைந்து விட்டது. அவசரப்பட்டு ஆங்கி லத்தை நீக்க முயலுவதால் குறு கிய மனப்பான்மையும், மொழி வெறியும் ஏற்பட வழி உண்டா கும்" என்று திரு. முன்சி தமது உரையில் கூறியுள்ளார்.

இவர் தெரிவித்துள்ள கருத்து மிகவும் கவனிக்கத்தக்கதாகும். இந்திமொழியை விரும்புபவர் களில் திரு. முன்சியும் ஒருவர் என்பது யாவரும் அறிந்ததே யாகும். அப்படிப்பட்ட ஒருவரே ஆங்கிலத்தை நீக்கிவிட்டு இந்தி யைப் புகுத்தக்கூடாது என்று எச்சரிக்கை செய்தால் அதைப் பற்றி வடநாட்டினரும், குறிப்பாக இந்தியை ஆட்சிமொழியாக ஆக்குவதில் தீவிரமாக இருப்ப வர்களும் சிந்திப்பது அவசிய மாகும். —தமிழ் நாடு.

★





★

அறந்தாங்கிக்கு அருகிலுள்ள சுப்பிரமணியபுரத்தில், **14-9-'57** ல் சி. என். ஏ. திறந்துவைத்த பள்ளிக்கூடக் கட்டிடம். கீழே, காட்சி தருவது சி.என். ஏ. திறந்துவைத்த கழகக் கட்டிடம்.

ஊர்ப்பெரியவர்களான, K. S. வயித்திலிங்கனர், V. முத்தையனர், T. கணேசனர், K. A. T. A. வீரப்பனர், S.A.S.ஆறுமுகனர், ஆகியோரின் பேராதரவும், நல்லெண்ணமுமே, பள்ளிக் கட்டிடம் அச்சிற்றூரில் எழக் காரணமாகும்.

பணம் செலவழித்து 'சரஸ்வதி பூஜை'செய்வோர் இது போன்ற பள்ளிகளைக் கட்டினல்?

★